போன் நெ 15. விலை 2 அணு. REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 29—11—53 | இதழ் 22

★ திருச்சி தந்த தீர்ப்பு ★

கருணாநிதி விடுதலைக் காட்சி

அறியவேண்டும் ஆச்சாரியார்

தாயகத்தை மண்ணென மதிக்கும் வடவர் ஆதிக்கத்தின் சின்னமாக விளங்கும் 'டால்மியாபுரம்' பெயர் மாற்றப் போராட்டத்தைத் துவங்கியதற்காக தோழர் மு. கருணாநிதியையும் அவருடன் களம் புகுந்த முதல் படைத் தோழர்கள் முல்லை. சத்தியம், கஸ்தூரிராசு, குமரவேல், குழந்தைவேல் எனும் வீரர்களையும், சிறைக்குள் பூட்டினார், ஆச்சாரியார். "ஆறுமாதம் கடுங்காவல்!", விதிக்கப்பட்டது, ஆச்சாரியார் சர்க்கார் வீசிய குற்றச்சாட்டுகளால். அதில், ஒரு மாதம், 35 ரூபா அபராதத் தொகையைக் கட்ட மறுத்தமைக்காக. ஆனால், 'பணமில்லை!' எனும் பல்லவியை அனுதினமும் பாடும், அரசாங்கம் விடுமா? ஆகவே, திருவாரூரில் அவரது காரை 'ஜப்தி' செய்து, இழுத்துச் சென்றிருக்கின்றனர். இவ்வளவு கோலாகல நடவடிக்கைகளையும் வீசினார், ஆச்சாரியார்! செல்லுமிடந்தோறும், கல்லக்குடி அறப்போரைக் கேலி செய்தார். இரண்டு பிணங்கள் வீழ்ந்ததையும் மறந்தார். அறப்போரின் பொருளை அறியாதவர் போலப் பலப்பல பேசினார். மக்கள் மன்றத்தில், தவறுதலான எண்ணத்தைப் பரப்ப ஏடுகளைத் தூண்டி விட்டார் — தன் எடுபிடிகளைப் பவனிவரச் செய்தார். அண்மையில் அவரே திருச்சி சென்று பலபல, செப்பினார். ஆனால் அவரது நோக்கும் போக்கும், எவ்வளவு தவறுகள் நிறைந்தவையென்பதைத் திருச்சி மக்கள் காட்டிவிட்டனர். கடந்த 21ந்தேதி சிறையிலிருந்து விடுதலை பெற்ற கல்லக்குடி அறப்போர்க் குழுத் தலைவர் மு. கருணாநிதிக்குக் காட்டிய வரவேற்பின்மூலம். சிறைவாயிலில் சமூகத் தோழர்களும் கலைவாணர் N S, K. யும், வரவேற்றனர் — ஏராளமாகக் கூடி, அறப் போராட்டக்குழு தலைவரையும் தொண்டர்களையும் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். அந்த ஊர்வலத்தில் கலந்துகொண்ட மக்கள் திரளையும் அன்று மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் வரவேற்பையும், ஆச்சாரியார் அறியவேண்டும் — அவரது பாதையைப் பின்பற்றி 'பெயர் மாற்றப்போரால், எந்தப் பிரச்னை தீரும்?' என்று கேள்வி யெழுப்பும் தோழர்களும், தெரிந்துகொள்ள வேண்டும்.

அடிக்க அடிக்க பந்து உந்திக் கிளம்புவதைப்போல, அடக்குமுறைப் பாயப் பாய அரசியல் இயக்கம் வளருமென்பார்கள்! அதனை, எடுத்துக்காட்டியது திருச்சி. அடக்குமுறைக்கு ஆளான தோழர் கருணாநிதியின்மீதும் அவரைத்தலைவராகக்கொண்டிருக்கும் அறப்போரின்மீதும் அன்பையும் ஆதரவையும் திருச்சி மக்கள், காட்டிக்கொண்டனர். அதனால்தான், வீடுகளிலும், கூரைகளிலும் நின்றபடி கூடிக்கிடந்தனர், வரவேற்பு வழங்க!

இந்தக் காட்சி, ஆச்சாரியாரின் ஏளனத்துக்கும் இழிசொல் வீச்சுக்கும், தக்கதோர் படிப்பினையாகும். தாறுமாறு செய்யும் எதேச்சாதிகாரர்களின் குரல், விடுதலை வீரர்களின் வெற்றியை, வீழ்த்திவிடாது என்பதற்கோர் எடுத்துக்காட்டா

"அன்று"-ஒரு காட்சி!

"நம்முடைய தரித்திரம் இன்று நேற்று, முளைத்ததா? அன்றும் இருந்தது—இன்றும் இருக்கிறது. தரித்திரம்! தரித்திர தேசம்!! — என்று பேசுவதால், என்ன பிரயோஜனம்?" —என்று அண்மையில் ஓரிடத்தில் திருவாய் மலர்ந்தார், நமது முதலமைச்சர், ஆச்சாரியார்.

ஏறிச்செல்ல காரும், 'இம்மென்னுமுன் 'ஏன்' என்று ஓடிவர எடுபிடிகளும், தேவைக்குப் பணம் தரப்பலரும், திரும்பினால் தெண்டனிட முத்தையா செட்டியார்களும் துணை நிற்கும்போது ஆச்சாரியாருக்கு, 'தரித்திரப் பேச்சு' சந்தனப் பூச்சாகக் காட்சியளிக்காதது வியப்பில்லை.

ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலமும், அதனைக் கட்டியாளும் அதிகாரிகளும், வேளாவேளைக்கு தங்க பஸ்மமும், வெளியில் புறப்பட்டால் கட்டிக்கொள்ள பீதாம்பரமும், காதில் வைரக் கடுக்கனும், மார்பில் ரத்னமாலையும், தலையில் ஜடாமுடியுமாக உலவுகின்ற சந்நிதானங்கள், செல்லுமிடந்தோறும், ஏழைகளின் வயிற்றுப்பசியைப் பற்றியா, பேசுகின்றனர்?—எப்படிப் பேசமுடியும் அவர்களால்!—என்றாவது, பசியை அறிந்திருந்தாலல்லவா, அதைபற்றிப்பேச!!

பசியறியா பண்டார சந்நதிகளைப் போல், வாட்டமறியா பூசுரர்களைச் சேர்ந்த ஆச்சாரியார், தரித்திரத்தைக் கேட்க அஞ்சுவதிலும், அச்சொல் கேட்கக்கேட்க ஆத்திரம் கொள்வதிலும், ஆச்சரியமில்லைதான்.

ஏனெனில், இவ்விதம் 'தரித்திரம் பேசி'கள் அதிகமானதால்தான் போக போக்கியத்தில் ஆழ்ந்து கிடந்த ஜார், முடி கவிழ்க்கப்பட்டான்—ரஸ்புடீன், கொலை செய்யப்பட்டான். 'தரித்திரம் பேசிகள்' அதிகரிப்பது, ஆபத்தின் அளவைக் காட்டும். நாட்டின் மக்கள், தரித்திரம் பற்றி அறிந்து, அது ஏன் என்று கேட்கத் துணிந்து, அதனை எப்படி நிவர்த்திப்பது என்று வழி காண முயன்றுவிட்டால், மாளிகையின் எழில் நீடிக்காது! மார்க்க போதகர்களின் வாழ்வு மேடை, சுகமாக இராது!! ஏழை, எளிமையாவான் — கோழை, குமுறுவான். தரித்திரம் ஒழிந்து—தரித்திரச் சேறு உற்பத்தியாவதற்குக் காரணமான சுகபோகிகளின் கொட்டம் அழிக்கப்பட்டு அங்கே, சுகந்தம் வீசும் சுதந்திர வாழ்வு, மலரும்! இதனை, ஏடு படித்த ஆச்சாரியார், அறிவார். அதனால்தான், அதைப் பற்றி, அடிக்கடி பேசாதீர்கள்— அது இன்று நேற்று முளைத்ததா? —இப்படிப் பேசுவதால் என்ன பயன்!—என்றெல்லாம், கேட்கிறார்; கேட்பதன்மூலம் மக்களின் அறிகுறியை மூடிவிட முயல்கிறார்.

மக்கள், தமது தரித்திர நிலையை வாய்விட்டுச்சொல்லவா, வேண்டும்? அவர்கள், தமது ஒளியிழந்த கண்களை ஒருமுறை உயர்த்தினால் போதும்! அது கூறிவிடும் எத்தனை நாளாக, அவன் வாதைப்படுகிறான் எனும் விபரத்தை. தள்ளாடித் தள்ளாடி, அம்மா, 'ஐயா, பிச்சை' என்றலைகிறானே, அவனது குரல் போதும், நாட்டின் கோரத்தை விளக்க. நடமாடும் மனிதர்கள்கூட வேண்டாம்! சல சலவென ஓடிக்கொண்டிருக்கிறதே சிற்றாறு' அதனை உற்றுப் பாருங்கள், வாழ முடியாதவனின் பிரேதம் ஒன்று ஒதுங்கிக்கிடப்பது, தென்படும். அந்தப்பிணம், வாய்விட்டாப் பேச வேண்டும்? மலர் குலுங்க தழைத்துக்கிடக்கும் அந்த மாச்சோலையை பாருங்கள்! ஒரு மரத்தில், ஊசலாடித் தொங்குகிறதே, ஒரு கயிறு— அந்தக் கயிறு, பிரசங்கமா, செய்ய வேண்டும்? அது, எத்தனை உடல்களின் உயிரைப் போக்கிய பாசக்கயிறோ? என்றகேள்வி நாம் எழுப்பாமலே, பிறக்குமே! இதனைமறந்துவிட்டார்போலும் 'மகான்.'

இந்திய உபகண்டத்துக்குச் சுயராஜ்யம் வந்ததாகக்கூறப்படுகிறதே, இதே நேரத்தில் சுதந்தரம் பெற்ற நாடுகள்தான், பாகிஸ்தானும்—பர்மாவும் — இந்தோனேஷியாவும். இந்த நாடுகளின் ஏடுகளையும், நமது 'பாரததேவி'யின் பத்திரிகைகளையும், எடுத்துப் பாருங்கள்! எங்கே, பிணங்கள் அதிகம்—எந்த நாட்டில் பசியால் சாவோர் இருக்கிறார்கள்—எப்பாகத்தில் தரித்திரத்தால், மரக்கிளைகளில் பிணமானோர் அதிகம்—எனும் விபரம், கிடைக்கும். இந்த விபரங்களை, மக்களுக்கு, எடுத்தா சொல்லவேண்டும்? ஏடு பிரிப்பவன் கண்களில் நாட்டின் நிலைகண்டு, தானாகவே, நீர் வழியுமே! இந்தக் காட்சியா, வெள்ளையன் காலத்தில் கிடைத்தது? அவன்காலத்தில் வங்காளப் பஞ்சத்தைக் கண்டோம்! ஆனால், இன்று? வங்காளத்தில்மட்டுமா, நாடு முழுமையும் பஞ்சம் அரசோச்சுகிறது! இதனைப் பார்ப்போருக்கு 'தரித்திரம்'பற்றி நாமா, எடுத்துரைக்கவேண்டும்? ஏங்குபவனும் இல்லாதவனும், விடும் பெருமூச்சுகள் அத்தனையும் தரித்திரத்தால்பிறந்த அனற்காற்றுகள்தானே இதனை அறியாதவர் அல்ல — ஆச்சாரியார் அறிகிறார்—ஆபத்துவளர்வதின் அளவையும் புரிந்துகொள்கிறார்— அதனால்தான் அதைப்பற்றி பேசாதீர்கள் என்று ஆக்ஞை பிறப்பிக்கிறார்—அதற்கு சான்று தேடி, 'தரித்திரம் இன்றுமட்டுமா இருக்கிறது? அன்றும்தான் இருந்தது' என்று கூறுகிறார். அன்று-இருந்ததாம்! என்று? காலவரையறையைக் கூறவில்லை, அவர். தரித்திரம், குமாரசாமிராஜா காலத்திலும்தான் இருந்தது—ஓமந்தூர்ரெட்டியார் ஆண்டபோதும்தான் இருந்தது-பிரகாசம் ஆட்சி நடத்திய நேரத்திலும்தான் இருந்தது—என்னாட்சியில் மட்டுமா இருக்கிறது-அன்று, என்று அவர் கூறுவதன், உள்ளர்த்தம்இதுதானா? அப்படியும் வைத்துக்கொள்ளலாம்! இல்லையெனில் 'நான் காங்கிரஸ்ராஜ்யத்தில் தரித்திரம் இருப்பதைச் சொல்லவில்லை. வெள்ளைக்காரன் ஆண்ட போதுமட்டும், தரித்திரம் இல்லாமலா இருந்தது—

என்றல்லவோ கேட்டேன்?' இப்படியும் சொல்லக்கூடும் அவர்!

ஆச்சாரியார், கூறும், 'அன்று', காலவரையறையில்லாதது. வெள்ளையன் ஆட்சிக்காலத்தைக் காட்டினால், அதற்கு முன்பு அரசாட்சி நடாத்திய சிற்றரசுகளின் காலத்துக்கு, நம்மைக் கொண்டு போக முயல்வார். இதுபோன்ற, வானவில் பேச்சுத்தான், வசீகரமாயிருக்குமாம்; ஒரு கூட்டத்தில், அவரே, கூறியுள்ளார். 'இருபொருள்பட, எதையும் பேசவேண்டுமே தவிர, பட்டவர்த்தனமாக எதையும் வெளியில் எடுத்துச் சொல்லக்கூடாது!—' என்பது, சீடகோடிகளுக்கு, அவர் வழங்கியுள்ள, சித்தாந்த விளக்கமாகும்.

எனவே, அவர் வார்த்தைகளுக்கு பொருள் காணமுயல்வது, பச்சோந்தியின் நிறத்தைக் கணக்கிட முயற்சிப்பதை ஒக்கும். எனவே, அவர் கூற்றை, விட்டு விடுவோம்.

ஆனால், ஒரு விஷயத்தை மட்டும் தெளிவுபடுத்துவோம். "அன்றும், அப்படித்தானே, இருந்தது?", என்று கேட்கிறாரல்லவா! "அன்று" எப்படியிருந்தது, தமிழகம்—எனும் காட்சியை, ஆச்சாரியாருக்குச்சிறிது விளக்குவோம். அவரை விவேகியாக்கும் ஆசையுடனல்ல, நாம் விரும்பும் புதுச்சமுதாயம் 'இது' வென்பதை விளக்க.

*

அவரோ, புலவர்! தமிழ்ப்பாடல்களால், வயிறை வளர்ப்பவர். அதிலும், வயோதிகப்பருவம். அவரின் புகழை அறிந்த மக்கள், அவர் வந்திருக்கிறாரென்று அறிந்ததும், கூட்டம் கூட்டமாகக்கூடிநின்று வரவேற்றனர். அவருடன், பேசுவதைப் பெரும்பாக்யமெனக் கருதினர், மக்கள்.

ஒருவன், அவருடைய பாடல்களைப்பற்றி, விளக்கம் கேட்டான். இன்னொருவன், அவர் பிறந்த பாண்டிய நாட்டின் சிறப்பு பற்றி கேட்டான். மற்றொருவன், அவருக்குத் தெரிந்த கவிவாணர்களைப்பற்றிக் கேட்டான். எல்லோருக்கும் பதில் கூறிக்கொண்டிருந்தார், புலவர், இதனையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த ஒருவருக்கு, திடீரென உதயமாயிற்று, ஒரு கேள்வி. புலவரின் உடையைக் கண்டார்! உருவைக் கண்டார்! வயோதிகப்பருவம் தெரிந்தது! தலையைப் பார்த்தார்— உற்று, உற்று பார்த்தார். ஆச்சரியம், தாங்க முடியவில்லை. புலவர்களென்றாலே, கஷ்டப்படுபவர்கள், என்பது பொதுவானபேச்சல்லவா? அதனை நினைத்தபடியே, அவர், புலவரைப் பார்த்துக் கேட்டார்.

"புலவர் பெருமானே! உங்களைப் பன்னெடுங்காலமாக நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படியிருந்தும், உங்களிடத்தில் நரைகாணப்படவில்லையே. இதற்கு, என்ன காரணம்?"

கேள்வி, கேட்டவரைப் புலவர், பார்த்தார். புலவரின், கண்களில், பெருமிதம் ஒளிவிட்டது. கேள்வி கேட்டவரோ, சோழமன்னனின் குடிமகன். சோழமன்னனோ, தன்னுருயிர்த் தோழன். இருப்பதோ, சோழமண்டலத்தின் தலைநகரான, உறையூர். எனவே, ஏடெடுத்து, தன் பதிலைப் பொழிந்தார்—

*

"யாண்டு பலவாக
நரையில வாகுதல்
யாங்காகிய ரென
வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியோடு
மக்களும் நிரம்பினர்
யான் கண்டனையரென்
இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான்
காக்கும் அதன்றலை
ஆன்ற விந்த டங்கிய
கொள்கைச்
சான்றோர் பலயான்
வாழும் ஊரே!"

*

"தலைமயிர் நரைக்கவில்லை என்று கேட்டாயே நான் எந்த ஊர் தெரியுமா?" என்று கூறுவதுபோல ஆரம்பித்து, அந்த ஊரின் சிறப்புகளை எல்லாம், வர்ணிக்கிறார், புலவர்! ஊரின் சிறப்புகளை ஒவ்வொரு புலவரும் வர்ணிக்கக் கேட்டிருக்கிறோம் நாம். ஆனால், இந்தப் புலவரின் விளக்கத்தைப் பாருங்கள்.

"மயிர், ஏன், நரைக்கவில்லை?!'— இது கேள்வி.

புலவர், கூறுகிறார். "என் நரைக்கவில்லை தெரியுமா? என்னுடைய மாண்பு வாய்ந்த மனைவியும் மைந்தர்களும் அறிவு நிரம்பியவர்களாயிருக்கின்றனர். என்னுடனிருப்போர், என்குறிப்பறிந்து நடக்கின்றனர். அரசனோ, நீதிநெறி தவறாமல், செங்கோலோச்சுகிறான். அதுமட்டுமின்றி, யான் இருக்கிற ஊரில் நற்குணங்கள் நிறைந்த சான்றோர் பலர் வாழ்கின்றனர்," என்று விளக்கி, "இதெல்லாமிருக்கும்போது எனக்கென்ன கவலை? கவலையில்லாதபோது நரையெப்படி ஏற்படும்?" என்று கேட்காமல், கேட்கிறார். இவ்விதம் கேட்கும் புலவரின் பெயர், பிசிராந்தையார். தன்னுருயிர்த் தோழன் கோப்பெருஞ்சோழன், உண்ணா நோன்பு மேற்கொண்டு உயிர்துறக்க எண்ணியதையறிந்து, உறையூர் வந்தபோதுதான், இந்தச் சம்பவம், நடைபெற்றது. இல்லத்திலும், இன்பம்! நாட்டிலும் இன்பம்!!— எப்படிக் கவலையேற்படும்? கவலையில்லையேல், மயிர் ஏன் நரைக்கின்றது?—என்று, தன்மன்னன் பாண்டியனின் ஆட்சியைப் புகழ்ந்துரைக்கிறார், புலவர்.

"அன்றும்" — என்கிறாரே, ஆச்சாரியார்! அந்த 'அன்று' ஒரு காட்சி இது!! இன்னும் ஏராளம் உண்டு—நீர்வளத்தையும் நிலவளத்தையும் புகழ்ந்துரைத்த பாடல்கள், தமிழிலக்கியத்தில் ஆயிரக் கணக்கிலிருக்கின்றன.

அந்த 'அன்று'போல், தமிழகம் செழிக்கவேண்டும் என்பதே நமது ஆசையாகும்.

ஆனால், ஆச்சாரியார் கூறுகிறார், 'தரித்திரம், என்றும்தான் இருக்கிறது!' என்பதாக.

புலவர் பிசிராந்தையாருக்கு கவலையென்பதே ஏற்படவில்லை— காரணம், தன்னுடைய மனைவியின் முகத்தில் ஆனந்தத்தைக் காண்கிறார்! மக்களைப் பார்த்தாலோ, அறிவு நிரம்பியவர்களாகக் காட்சி தருகின்றனர்! அரசோ, மக்கள் யாவருக்கும் துன்பம் விளைவிக்காது, மக்கள் யாவருக்கும் இன்பம் ஏற்படுத்தப்பாடுபடுகிறது! இதுதானே, ஏழை மகனுக்கு வேண்டியது.

ஆனால், இன்று! குடிமகன், தன் ஆசை மனைவியைப் பார்த்தால், அவள் கண்களில் வழியும் கண்ணீரையே காண்கிறான். மக்களைப்பார்த்தாலோ, அவர்களுக்கு வேண்டிய கல்வியறிவுமில்லாது கலங்குவதைப் பார்க்கிறான். அரசோ, அகப்பட்டுக்கொண்டோரைப் பழிவாங்கும் பயங்கர மேடையாகக் காட்சி தருகிறது. இதனைக்காணும் ஏழைமகன் இதயத்தில், என்ன ஏற்படும்? உயிரைப் போக்கிக்கொள்ள ஒரு முழக்கயிறும், பாழடைந்த கிணறுகளையும் தானே, தேடிச் செல்லுவான்!

புலவர், பாடுகிறார்—அரசின் தன்மையால், தலையில்கூட நரையேற்படவில்லை, என்று!

இப்போதுள்ள பொன்னனைக் கேளுங்கள்—பொன்னே! இந்த சர்க்கார் செய்ற அட்டகாசத்தைப் பார்க்கிறபோது, இருக்கிறதைவிட, சாவதுமேல்!— என்று, கூறுவான்.

இந்த அழகிலிருக்கிறது, இந்த அரசாங்கம்.

எனினும், ஆச்சாரியார் கூறுகிறார்—'தரித்திரம்', இந்தத்தயாபரருக்கு மட்டும் புதிதாக முளைத்ததல்ல! நெடுநாட்களாகயிருக்கிறதென்பதாக!!

இந்த விளக்கத்தை உரைக்குமளவுக்கு அவருக்கேற்பட்ட, நெஞ்சுத்துணிவு, எவ்வளவென்பதைப் பாருங்கள். இந்தவிளக்கத்தைஇவர் வாயிலிருந்து பெறுவதற்காகவா, ஆயிரக்கணக்கில், கொட்டிக்கொடுக்கிறோம்?

தரித்திரம், நம் நாட்டின், நிரந்தரச் சொத்தாம்! அன்றும் இருந்ததாம்—இன்றும் இருக்கிறதாம்!!

அந்த "அன்று"—தமிழகம், எப்படியிருந்தது. இந்தத் தர்ப்பாசூரர்கள் புகாத 'அன்று' தமிழகம், எவ்வண்ணம், அழகுடன் விளங்கிற்று, இதனை, விளக்க, பிசிராந்தையார் பாடல் போதும்.

அந்த "அன்று" முகிழ்க்க! நாம், பாடுபடுகிறோம்! ஆனால், இவர், கேடுகள் அழியாமலிருக்க, என்னென்ன ஏற்பாடுகள் செய்யலாம் எனும் ஆலோசனையில் கிடக்கிறார்!! —அதனால்தான், இத்தகைய விசித்திர வியாக்யானங்கள், பிறக்கின்றன.

★

விந்தைச் செய்தி!

"உன்னுடைய தொழில்என்ன?"
"என்னுடைய தொழிலா? பட்டினி கிடப்பது!"

*

இந்தப் பதில், பரிகாசத்தையும், பரிதாபத்தையும் உண்டாக்கும். கேள்வி கேட்டவர், உல்லாசபுரியினராயிருந்தால், உரத்துச் சிரிப்பர்! உலரும் கூட்டத்தினராயிருந்தால், பரிதாபப்படுவர்!! ஆனால், இந்தப் பதிலைக் கூறியவர் பிறரின் பரிகாசம்—பரிதாபம்— எதைப்பற்றியும் கவலைப்படவில்லை. யார் கேட்டாலும் இதுதான் பதில்.

'என்ன உங்களுக்கு, தொழில்?' 'பட்டினி கிடப்பது!' — இவ்வண்ணமே, கூறிவருகிறார். இந்தப் பதிலைக் கூறும் நபர், சம்பாதிக்கமுடியாது திண்டாடும் சாமான்யர்களில் ஒருவரோ? என்றெண்ணுகிறீர்கள். அவர், சாமான்யரல்ல இன்று! சகலரும் வியக்கும் சாமார்த்தியசாலி!! சோற்றுக்கு அல்லாடும் நிலையில், இன்றில்லை அவர். பணம் சம்பாதிக்கிறார். பாராட்டும் பெறுகிறார். எங்ஙனம்? பட்டினி கிடந்து! உண்மை இது. கேலியல்ல. பட்டினி கிடப்பதுதான், அவருடையதொழிலாம். உலகத்தில் வாழும் மனிதர்கள் வயிறு காயாமலிருக்கவே, ஏதாவது தொழில்செய்கிறார்கள். ஆனால் இவரோ, வயிறைப் பட்டினிபோடுவதையே, தொழிலாகக் கொண்டிருக்கிறார். இந்த விசித்திர மனிதரின் பெயர், ஹீராஸ். இருப்பது, அமெரிக்காவின் பிடியிலுள்ள மேற்கு ஜெர்மனியில். அண்மையில் இவர் 80 நாட்கள் தொடர்ந்து தன்னுடைய 'தொழிலில்' ஈடுபட்டாராம்! விரைவில் அமெரிக்கா சென்று தன்னுடைய 'தொழிலை'ச் செய்யப்போகிறாராம்!!

இந்த விசித்திரமான தொழிலில், ஹீராஸ் ஏன், ஈடுபட்டார். சிந்தையைக் குழப்பக்கூடிய விஷயமல்ல, இது. தொழில் செய்பவனின்ஆசை என்ன? பணம் சம்பாதிப்பதுதானே பணம் சம்பாதிப்பதற்காக, பட்டினி கிடக்கிறார்!! லோபியோ என்று கேட்பீர்கள்.லோபியல்ல,பணத்தை நன்றாகச் செலவு பண்ணக்கூடிய ஏழைக்கூட்டத்தைச் சேர்ந்தவர் தான். பண ஆசையால், அல்ல, பட்டினித் தொழிலில் ஈடுபட்டது! பணத்தேவையால்!!

ஒரு பெரிய கண்ணாடிக் கூண்டுக்குள், எல்லோருக்கும் தெரியும் படியாக உட்கார்ந்தபடி, இவர், தன்னுடைய தொழிலைச் செய்கிறார். தொழில் முடியும் போது இவருடைய சாதனையை வியந்து ஏராளமானோர், பணம் தருகிறார்கள்.

இதே ஹீராஸ், எவரிடமும் கூறாமல், எத்தனை நாட்கள் வெறும் வயிற்றோடு வீட்டுக்குள் கிடந்திருக்கிறாரோ? யார் அறிவர்! வீட்டில் மனைவியும், குழந்தையும் கதற, சம்பாதிக்கும் மார்க்கமறியாது, எத்தனை தினங்கள் திகைத்துக் கிடந்தாரோ? யாருக்குத் தெரியும்! தன்னுடைய பட்டினியைக் கூறியதால், எத்தனைபேர்களால், 'போடா! போ' என்று விரட்டியடிக்கப்பட்டாரோ! ஏளனம் செய்யப்பட்டாரோ!!

இன்று துணிந்து பட்டினி கிடப்பதை, 'மார்க்கெட் விஷயமாக்கி', வித்தையாகக் காட்டும் போது, வியக்கின்றனர் பலர்! குவிக்கின்றனர், பொருளை! அகில உலகமும் பரவும்படி செய்திகளைப் பரப்புகின்றனர்!

ஹீராஸ் போன்றோர், உலகில், ஏராளம் இருக்கிறார்கள். அவர்களைக் கண்டாலே ஏச்சும் பேச்சும் வீசி, விரட்டியடித்து, வேதனைப் படுத்தும் சுகவாசிகள் கூட்டம், பட்டினி கிடப்பதை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. ஆனால், அதனை ஒரு வித்தை யென்று கூறி 'மார்க்கெட் விஷயமாக்கியதும்', சர்க்கஸுக்குப் போவது போல், வந்து பார்த்து, வரிசைகளும் வழங்குகின்றனர். எவ்வளவு விசித்திரமான உலகம்! எத்தகைய வேடிக்கையான மனிதர்கள்!!

✱

'உன் மனைவியை ஒழுங்குசெய்!'

[அரங்கண்ணல்]

"கந்தசாமி! உன் மனைவி கமலா போட்டிருக்கும் ரவிக்கை, சுத்த கர்னாடகமாயிருக்கிறது — 'சோலி' போட்டுக்கொண்டால், அவள் வனப்பு வசீகரமாய் இருக்கும். சேலையை அவள் கட்டிக்கொள்ளும் விதம், சரியல்ல. தலையை, பட்டிக் காடுபோல், வாரிப் பின்னுகிறாள். நீ, வாங்கிக் கொடுத்திருக்கும் தொங்கட்டான், பழைய 'மாடல்'. இவைகளைப் பார்க்கும்போது எனக்கு என்னவோபோலிருக்கிறது! இலேசான சேலை ரம்யமான கலரில் கட்டிக்கொண்டு, புது மோஸ்தர் சோலியைப் போட்டவண்ணம், தலையை அலங்காரமாகச் சீவிக்கொண்டு, மஞ்சளுக்குப் பதில் ஸ்னோவும், கண்ணாடி வளையலுக்குப் பதில் 'வாட்சும்' கட்டிக்கொண்டு, அவளை இருக்கச் சொல்!"

*

இவ்விதம், எதிர்வீட்டு எல்லப்பன், கந்தசாமியிடம் சொன்னால், என்ன கிடைக்கும்? — பதில் கூற வேண்டாம், நீங்கள் — நினைத்துப் பாருங்கள். கந்தசாமி, சாதுவாக இருந்தால், எல்லப்பனை நோக்கி, 'பாதாழ்வார்' பறப்பார்! கொஞ்சம் கோபக்காரனாயிருந்தால், குத்தும் வெட்டும், பரிசாகக் கிடைக்கும்!! பாதாழ்வாரைப் பறக்கச் செய்வதும், அரிவாளைத் தூக்கிக்கொண்டு பாய்வதும், அரசியல் உலகில் நடக்கக்கூடாத காரியங்களாதலால், கராச்சியிலிருக்கும் "டான்" எனும் ஏடு, எழுத்துக்கள்மூலம் தன் ஆத்திரத்தை அள்ளி வீசியிருக்கிறது—"உன் யோக்யதையை, நீ கவனித்துக்கொள். எங்கள் வீட்டு விவகாரம் எங்களோடிருக்கட்டும்" என்பதாக. இந்தளவுக்கு ஆத்திரக்கனலை யார்மீது அள்ளித் தெளித்திருக்கிறது, தெரியுமா? கடந்த இரு வாரங்களுக்குமுன், சென்னையில் கூடிய மண்டபக் கூட்டமொன்றில், புகழ் மாலைகளைக் குவித்தாரே, அன்பர் ஆச்சாரியார் — அந்தப் புகழ் மாலைகளுக்குரியவரான நேரு பண்டிதர்மீது. நேரு பண்டிதர், ஆச்சாரியார்போன்றோர் கூறும் புகழ் வார்த்தைகளை உண்மையென நம்பி, அகில உலகுக்கும் தலைவராக ஆகிவிடுகிறாரல்லவா, சில சமயங்களில். அதனால் வந்த விபரீதம்தான், டானின், தாக்குதல்! பதவிகளைப் பெறவும், பணவேட்டையில லாபம் பெறவும், பத்திரிகையில் படங்களைப் போடவுமான 'சில்லரை'களில் சிந்தையைச் செலுத்தி, பாபம், பண்டித நேருவைப் பலபடப் புகழ்ந்துவிடுகிறார்கள், பலர். அவரின் முகவிலாசம் — அவரின் ஆள்காட்டி விரலுக்கு ஆடும் உலக சமாதானம் — அவர் குரல் கேட்டால் தெண்டனிடுகின்றன ஆசிய நாடுகள் — அமெரிக்கர் அவரைத்தான் ஆலோசனையாளராகக் கருதுகின்றனர்—போர் ஆபத்திலின்று ரஷ்யா தப்பித்துக்கொண்டிருப்பதே நேருவின் ராஜதந்திரத்தால் தான்—உலகத்தையே உய்விக்க வந்த தலைவர்—என்றெல்லாம், இவர்கள், அவரை முகஸ்துதி செய்து, கடைசியில் யாராவது மூக்கைபறக்கும்படி செய்துவிடுகிறார்கள்! அந்த மூக்கறுப்புப் படலத்தைத்தான், 'டான்' இதழ் செய்திருக்கிறது!!

*

கமலாவின் அழகுக்கு 'நோட்டம்' சொன்ன எல்லப்பனை, கந்தசாமி கேட்பதுபோல், டான் இதழ், பண்டித நேருவைப் பார்த்து கடுமையாகக் கூறியிருக்கிறது, "ஐயா! பண்டிதரே, உம் விஷயத்தைக் கவனியும்!" என்பதாக. அதற்கென ஒரு தலையங்கம் தீட்டி, காரசாரமாக எச்சரித்திருக்கிறது. "எங்களுக்கு யோசனை கூற, நீர் யார்?"—என்று கேட்கிறது, டான் இதழ். உண்மைதான், கமலாவின் அழகைப்பற்றி, எல்லப்பனுக்கேன் கவலை ஏற்படவேண்டும்? — எண்ணத்தான் செய்வர், பிறர் அந்த [illegible] ஏற்படாமல் போகுமா? ஆகவே, கேட்கிறது! 'ஐயா! பண்டிதரே, எங்கள் விஷயத்தில் தலையிட யார் நீர்? உமது வேலையை, நீர் ஒழுங்காகக் கவனியும்!' என்பதாக. இந்தளவுக்கு ஆவேசமும் ஆத்திரமும் டான் ஏட்டுக்கு வந்ததற்குக் காரணம்—பாகிஸ்தானுக்குப் புத்திமதி கூற பண்டிதர் புறப்பட்டதுதான். பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் குலாம் முகம்மது அமெரிக்க நாட்டில் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருக்கிறார். அவரும், அமெரிக்கத் தலைவர் ஐசன்ஹோவரும், அங்கே சந்தித்து உரையாடிக்கொண்டிருக்கிறார்கள். அப்போது, ஒரு ஒப்பந்தத்துக்கு வந்திருக்கிறார்கள். 'பாகிஸ்தானுக்கு வேண்டிய ஆயுத தளவாடங்களையும் போர் சம்மந்தமான உதவிகளையும், அமெரிக்கா வழங்கும்' என்பதே அந்த ஒப்பந்தமாம். அதனைக் கேள்வியுற்ற பண்டிதர், பாகிஸ்தானுக்கு அறிவுரை கூற முற்பட்டார்! 'ஐயயோ! இது ஆபத்தாச்சே. அமெரிக்காவுக்குப் பிடி கொடுக்கிறீர்களே. இந்த ஒப்பந்தத்துக்கு ஒப்புக்கொண்டுவிட்டால், பிறகு, அமெரிக்கா யுத்த களங்களை ஏற்படுத்திக்கொள்ளுமே. அப்புறம், ஆசிய நாடுகளையே பயமுறுத்துமே!' என்று டில்லியிலிருந்தபடி அலறியிருக்கிறார். அதற்குத்தான், 'டான்' இதழ்பதில் தெரிவிக்கிறது, 'ஐயா, பண்டிதரே, உம் விஷயத்தை முதலில் கவனித்துக்கொள்ளும்' என்பதாக.

*

பாகிஸ்தானில் அமெரிக்க ஆயுதங்கள் குவியத் துவங்குவது, ஆபத்தான காரியம்தான். அதனை, எவரும் மறுக்கார். ஆனால், இந்த ஆபத்தை, இவர் எடுத்துச் சொல்லும்போதுதான், விஷயம் விரசமாகிறது! எதிர்வீட்டு கந்தசாமியின் மனைவிக்கு நோட்டம் சொல்லப் போன எல்லப்பன், முதலில், தன் மனைவியின் அலங்கோலத்தைச் சீர் [illegible]

பற்றி எண்ணாமல், பிறருக்கு, ஆலோசனை கூறச் சென்றால், டானின் பதில்தானே கிடைக்கும்.

அமெரிக்காவின ஆபத்தைக் குறித்து, பண்டிதர் அலறுகிறார் — பாகிஸ்தானுக்கு வீழ்ச்சியேற்படும் என்று கூவுகிறார்.

எந்த அமெரிக்கரால் ஆபத்து விளையும் என்று இவர் கூறுகிறாரோ, அதே அமெரிக்கர், இவருடைய பூமியான இந்தியாவில்மட்டும கொட்டமடிக்காமலா இருக்கிறார்கள்! கம்யூனிடி திட்டம்—கலாச்சாரப் பெருக்கம் — அணைக்கட்டுத் திட்டம்—தொழில் வளர்ச்சித் திட்டம்—என்கிற பெயருடன் இங்கே உலவும் அமெரிக்கர்கள், எத்தனை பேர்? இவர்களெல்லாம், புனிதகுல மாணிக்கங்களா? பலன் விரும்பாது பாடுபடும் உலகோத்தமர்களா?— அதைத்தான், டான் இதழ் கேட்கிறது.

அன்று, பண்டிதர், அமெரிக்கா சென்றார் — ட்ரூமனின் கைலாகு பெற்றார்—கொஞ்சினார் — குலாவினார்.

அது, ஆபத்தின் அறிகுறி அல்ல.

இன்று, குலாம், அமெரிக்காவில் ஐசன்ஹோவருடன் கூடிக் குலவுவதுமட்டும், ஆபத்து.

இந்த விசித்திர வாதத்தைக் கேட்டால், 'டான்' இதழென்ன, சாதாரணமானோர்கூட சிரிக்கத்தானே செய்வர். பாகிஸ்தான், அமெரிக்காவுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம் கண்டதும், ஓடோடியும் புத்திமதி கூறுகிறாரே இந்த உலகத் தலைவர்; இவருடைய பூமியில், நடப்பதென்ன? பக்கத்து நாடு — பத்து கோடி மக்களைக் கொண்ட நாடு — பாகிஸ்தானுக்கு போதனை புரியப் புறப்பட்டாரே, இவர், இதோ சுண்டைக்காயளவிலிருந்து கொண்டு தொல்லைகள் தந்தபடியிருக்கிறதே, கோவா, அதைத் தட்டிக் கேட்கவோ, அடக்கியொடுக்கவோ, இயலாத இவர், அங்கு மட்டும் புத்தி கூறப்புறப்படலாமா?

அமெரிக்கா, பாகிஸ்தானுடன் ஒப்பந்தம் பேசுவது கண்டதும் ஆத்திரமும் அதிருப்தியும் கூத்தாடுகிறதே பண்டிதருக்கு அவருடைய [illegible] போர்த்துகீசிய [illegible] கோவாவில் நடைபெறும் கூத்தைக் கேளுங்கள்.

கோவாவில், அமெரிக்கா ஒரு ஸ்தானீகரை நியமித்திருக்கிறது.

கோவாவில் விமானதளங்கள் அமைக்க, அமெரிக்கா போர்ச்சுகலுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

கோவாவிலுள்ள இரும்புச் சுரங்கங்களில் ஜப்பானியக் கம்பெனிகள் மூலம் அமெரிக்கா கோடிக் கணக்கில் பணம், முதலீடு செய்து வருகிறது.

ஏராளமான ராணுவ அதிகாரிகளையும், யுத்த தந்திர நிபுணர்களையும் கோவாவில் கொண்டு வந்து குவித்திருக்கிறது.

இவ்வண்ணம் கோவா மக்கள் தலைவர் தோழர் வாஸ், அண்மையில், அறிக்கையொன்று விடுத்துள்ளார். இது, இங்கேயுள்ள கோவாவின் நிலைமை! இதைப் பற்றி சிறு வார்த்தையும் செப்பாத பண்டிதர், பாகிஸ்தானென்றதும், பதறுகிறார் —புத்திமதி கூறுகிறார். இதனைக் காணும் போது, 'டான்' இதழுக்கு, எரிச்சல் ஏற்படத்தானே, செய்யும்.

*

பாகிஸ்தானுக்கு பண்டிதர் புத்திமதி கூறப்புறப்பட்ட விஷயம் குறித்து, டச்சுக்காரர்களின் ஏடு ஒன்று ரசமான தகவலை வெளியிட்டிருக்கிறது — "பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவுக்கும், ராணுவ ஒப்பந்தம் ஏற்பட்டால், அது, காஷ்மீரத்தை மிகவும் பாதிக்கும்", என்று கூறுகிறது. எங்கேயோயிருக்கும் இந்த ஏடு, இந்த உண்மையை உரைக்கும் போது, இங்குள்ளோர் பண்டிதரின் பதட்டத்துக்குக் காரணம் புரியாமலா யிருப்பார்கள். கோவாவில் அமெரிக்கத்தளம் ஏற்

வீரனின் கேள்விகள்

"ஆச்சாரியாரை பாதுகாக்க, 'அகில உலகக் கட்சியொன்று' முயலுகிறதாமே—உண்மைதானா?"

"அதனால்தான் ஆச்சாரியாரின் எதிர்ப்புக் குழுவைச் சார்ந்த டாக்டர் வரதராஜுலு மீது, வசைமாரி பொழியத் துவங்கியிருக்கிறதா?"

"ஆச்சாரியாரின் புதுக் கல்வித் திட்டத்தை, வர்ணாசிரமக் கல்வித் திட்டம் என்று நாடே கூறும் போது—இந்த அகில உலகக் கட்சி மட்டும் புது வியாக்யானங்களைக் கண்டு பிடித்து மக்களின் மனதைக் குழப்புவானேன்?"

"அடிக்கடி ஆச்சாரியாரை, இந்த அகில உலகக் கட்சியின் தலைவர், சந்தித்துப் பேசுவதன் மர்மம் என்ன?"

"வெளிநாடுகளில் சென்று பிழைப்போரில் தென்னாட்டவரே அதிகமாயிருக்கின்றனர் — என்று டில்லி சர்க்காரின் கணக்கெடுப்பே, கூறும்பொழுது, இந்தக் கட்சியின் ஏடுமட்டுமே, புது விளக்கம் தரப் புறப்படுகிறதே—இது ஏன்? எத[illegible] ஏற்பட்டது, இந்த அவசியம்?"

[illegible]

என்று சொன்னால் அதற்காகக் கருப்புக் கொடியா காட்ட வேண்டும். அமெரிக்காவின் ஏஜண்டான அவர், அப்படிச் சொல்லாமல் எப்படிச் சொல்வார்? — என்று நமக்குப் புத்தி போதிக்கப் புறப்பட்ட இந்தக் கட்சி மட்டும், திருவாங்கூரில் கட்ஜுவுக்குக் கருப்புக் கொடி பிடித்ததேன்! அமெரிக்காவின் ஏஜண்டான நேருவின் சகாதானே, கட்ஜு? அவரிடம் மட்டும் எப்படி நேர்மை கிடைக்குமென்று, இந்தக் கட்சி, எதிர்பார்க்கிறது!"

"முன்பெல்லாம், 'ஜன விரோத சர்க்காரை ஒழிக்க வாரீர்!' என்று ஐக்கிய முன்னணி மேடையமைத்த இக்கட்சி, இப்போதெல்லாம், பேசாமலிருப்பதேன்? ஜன விரோத சர்க்கார் – போய்விட்டதா, ஆச்சாரியாரின் 'விரோதி நெம்பர் 1' பட்டம் தளர்ந்ததும்?"

"இந்தக் கட்சி எம். எல். ஏ. ஒருவர், ஒரு பல்கலைக் கழக செனட் மெம்பராக, காங்கிரஸ் கட்சியின் ஆதரவைப் பெற்றதாகக் கூறப்படுவது, எவ்வளவு தூரம், உண்மை?"

படுவதைக் குறித்து கவலை தெரிவிக்காதவர்—மலேயாவில் அமெரிக்கர் பிடி வலுப்பதைக் குறித்து ஆயாசப்படாதவர்—இலங்கை, இங்கிலாந்தியரின் எடுபிடியாகயிருப்பதைக் குறித்து எதுவும் கூறாதவர், இப்போது மட்டும் எழுந்து நின்று, 'ஏ! பாகிஸ்தானே—இதோ, உனக்கு ஆபத்து' என்று அவசர ஒலம் எழுப்பக் காரணமென்ன? பயம் கொள்கிறார்! காஷ்மீரத்துக்காக, காசுகளைக் கொட்டி, ராணுவத்தை வளர்த்து, மிரட்டிக் கொண்டிருப்பது இனி பலிக்காதோ?—என்ற பயம், அதிகமாகிறது, பண்டிதருக்கு உடனே, 'அகில உலக'க் குரலுடன், புத்திமதி போதிக்கக் கிளம்புகிறார்! இதன் சூட்சமத்தைக் காணும், டான், ஒரு பக்கம் கேலியோடும் மற்றோர் பக்கம் கோபத்தோடும் பண்டிதரைப் பார்த்து அதட்டுகிறது, "எங்கள் விஷயத்தில் தலையிட நீர், யார்? உமது வேலையை ஒழுங்காகச் செய்யும்!", என்று.

வீதியில் கிடந்த பானைக்குள் கழுத்தை விட்டுக் கொள்வானேன்! —பிறகு, 'ஐயோ!, அப்பா!' என்று கதறுவானேன்!! இதனைத்தானே, நம்போன்றார், சொன்னோம்—இவர்கள், காஷ்மீரத்துக்காகக் காசைக் கரியாக்கியபோது. அப்போது சீறினர்! இப்போது டான், இவர்களை, எள்ளி நகையாடுகிறது!!

*

அகில உலகப் பிரச்னைகளில் ஆழ்ந்த கவனம் செலுத்துவதும், அதற்கேற்றபடி தன்னுடைய அமைத்துக்கொள்வதும் மிக மிகத் தேவையானதுதான். இருபதாம் நூற்றாண்டில், கண்ணை மூடிக்கொண்டு, 'கண்டதே காட்சி! கொண்டதே கோலம்!' எனும் ஆச்சாரியாரைப்போல, பண்டிதநேரு இருக்கவேண்டுமென்பதல்ல நமது விருப்பம் எல்லா பிரச்னைகளையும், அறியட்டும்—அவைகளை ஆராயட்டும். மறுக்கார், எவரும் ஆனால், அகில உலகத் தலைவர்களில் ஒருவராகும் ஆசையில், ஆங்காங்கும் தூதுவராலயங்களை நிறுவி—அந்தத் தூதுவர்களையும் தனக்குப் பிடித்தவராக நியமித்து—தினசரி தன்னுடைய புகழை வெளிநாடுகளில் பரப்பும் வேலையே அவர்களுடையது, எனவுரையறுத்து—ஜோதி, ஜொலிக்கிறது என்பதைக்காட்டி இந்நாள் காங்கிரஸ் மந்திரிகளை யெல்லாம் மயக்கி — தன்னுடைய எதிரிகள் ஏதாவது பேசினால், அவர்களுந் தன்னுடைய அகில உலகப்புகழைக் காட்டி, மட்டந்தட்டி —மகாமேரு போல விளங்க நினைக்கிறாரே நேரு அதன் விபத்தைத்தான் 'டான்' ஏடு, எச்சரிக்கிறது.

'கூடிக்கெடுப்பது' — என்பது அருமையான சித்தாந்தமாகும் ஒரு விரோதியைக் குட்டிச்சுவராக்க, அவனுடன் கூடியுறவாடிக் கெடுப்பதே, சிறந்த முறை என்பர். அவனோடு கூடியிருந்து அவனைப்பற்றி புகழ்ஸ்துதி செய்து அவனுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, உச்சிக்குக் கொண்டுபோய் வைத்து, உருட்டி ஒரே பாய்யாகக் கீழே தள்ளி விடுவதென்பது, சாமர்த்தியமாகச் செய்யப்படும் தந்திரமாகும். இந்த வித்தையில் தலைசிறந்த அமெரிக்கர்கள், பண்டிதருக்குப்பலமான விளம்பரத்தைத் தேடித் தந்தார்கள் — அகில உலக அரங்கில். அதன் ஆபத்தை உணராத இவரும், அகில உலகத்துக்கும் வக்கீலானார். அதனைக்கண்ட, ஆச்சாரியார் போன்றோர், அந்த 'அகில உலகப்புகழை' இங்கே எடுத்தோத ஆரம்பித்தனர். ஆச்சாரியாருடைய மூளையும், 'அமெரிக்க மாடலை'ச் சேர்ந்ததுதானே! அதனாலேயே, நேருவின் புகழை நீளமான பிரசங்கங்களின்மூலம், பண்டிதரே கண்டு மலைக்குமளவுக்கு ஆச்சாரியாரும் பல், எடுத்துரைத்து வருகிறது. அதனைக்கண்ட, பண்டிதரும், அமெரிக்காவுக்கு ஒருநாள் போசனை — மறுநாள் இங்கிலாந்துக்கு ஆலோசனை—இன்னோர்நாள் ரஷ்யாவுக்கு நல்லுரை—மற்றோர்நாள் சீனாவுக்கு புத்திமதி — இவ்வண்ணம், வெளிநாடுகளுக்குப் "புத்திமதிகள் தயாரிக்கும் ஆலையாக" தன்னுடைய வெளிநாட்டிலாகாவை மாற்றிக் கொண்டிருக்கிறார். அதனால்தான், பாகிஸ்தானுக்கும் புத்திமதி கூறினார். பாகிஸ்தான் பக்கத்திலிருப்பது! அதுவும் பண்டிதரை நன்றாக அறிந்துகொண்டிருப்பது! ஆகவே, சுடச் சுட, தந்திருக்கிறது பதில்.

'டானின்' பதிலையும், அமெரிக்காவின் தளமாக பாகிஸ்தான் ஆவதின் ஆபத்தையும், அதன் விளைவுகளையும், நல்லோர் புரிந்துகொள்ள முடியும்.

நாம், எடுத்துக்காட்ட விரும்புவது, தன்மனையை அலட்சியமாக வைத்துக்கொண்டிருக்கும் இவர் ஏன், 'எதிர்வீட்டுக்காரனின் மனையாட்டியை அழகு செய்யப் புறப்படவேண்டும்? இங்கே, என்ன வாழ்கிறது! எங்கு பார்த்தாலும் அமெரிக்க மோகம்தானே!! அவர்கட்குத்தானே யோகம் அடிக்கிறது. இதனை நாம் சுட்டிக்காட்டியபோது சீறினரே, பண்டிதரின் பல்லக்குத் தாங்கிகள்? இப்போது என்ன சொல்வர்! பண்டிதர் 'அமெரிக்காவின் ஆபத்து' என்றலறுகிறார்—காஷ்மீர் கை நழுவி விடுமோ எனும் பயத்தில். 'டான்' கேலி செய்கிறது அவரை.

இந்தக் கேடுகெட்ட காட்சி ஏன்! எல்லாம், ஊருக்கு குடைபிடிக்கக் கிளம்பியதால் ஏற்படும் விபரீதம் தானே? இருப்பதோ. பொத்தல் குடை! அதைச் சரிப்பார்த்து, தன்னைக் காத்துக்கொள்ள வக்கில்லாதவர், ஊர் முழுமைக்கும் குடைபிடிக்கக் கிளம்புவதும், பின் குட்டுப்படுவதும், அப்பப்ப! அநாகரீகமான காட்சிதானே!!

★

சென்னையில் வரவேற்பு விழா

சிறைமீண்டு திரும்பும் பொதுச் செயலாளர் அண்ணா அவர்களுக்கும், தோழர்கள் நெடுஞ்செழியன், சம்பத், என் வி. நடராசன் ஆகியோருக்கும் டிச 30-ந்தேதி காலை 9-மணிக்கு சென்னை சிறைவாயிலில் வரவேற்பு அளிக்கப்படும்.

மாலை திருவல்லிக்கேணி கடற்கரையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறும்.

கே. எம். கண்ணபிரான்
செ. மா. செயலாளர்.

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்கு முறை!!

திராவிடநாடு

காஞ்சி] 29—11—53 [ஞாயிறு

இந்த மூன்று மாதம்

★

தூத்துக்குடியிலிருந்து சென்னை வரை, 600க்கு மேற்பட்ட கூட்டங்கள் நடைபெற்றன.

பற்பல ஊர்களில், புதுக் கழகங்கள்!—அவைகளின் எண்ணிக்கை 50க்கு மேலிருக்கும்!!

பல ஊர்களில் 'ஜப்தி'கள் நடத்தினர், ஆளவந்தார். பயமுறுத்தல் கணைகளை அள்ளி வீசினர். அது எதையும், கவலைக்குரியதாக எடுத்துக்கொள்ளவில்லை, கழகக் காளையர்.

சிறைகள் திறந்தன! மூடின!! பலர் நுழைந்தனர், வந்தனர். கண்டனக் கூட்டமும், பாராட்டுக் கூட்டமும் தொடர்ந்து நடந்தபடியே இருக்கின்றன.

திருச்சியில் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டனர் — தோழர்கள். வழக்காடப்படுகிறது! விட்டு விடப்படவில்லை!!

தூத்துக்குடியிலே தோழர்கள் 100க்குமேல், அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளால் தாக்கப்பட்டு, அடைபட்ட சிறைகளுக்குள் கிடக்கின்றனர். அவர்களை; வெளியே கொண்டுவர, உயர்நீதி மன்றத்தின் படிக்கட்டுகளை ஏறத் தயங்கவில்லை, கழகம். இதோ, வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, நெல்லையில்! வழக்கறிஞர்கள் அறுவர், வாதாடிக் கொண்டிருக்கின்றனர், நிரபராதிகளை விடுவிக்க!!

*

இந்த நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறுதென்று எதிர்பார்த்தார், ஆச்சாரியார். நடைபெறாமல் செய்ய வேண்டுமென்பதற்காகவே, குற்றச்சாட்டுகளை வீசி, கொண்டு பூட்டினார், தி. மு. க. பொதுச் செயலாளரையும், அவரது முன்னணி வீரர்களையும். இவர்களை அடைத்துவிட்டால், பிறகு நாடு, நம் வேட்டைக்காடுதான் என்றெண்ணினார்! மிரண்டு, பயந்து, கழகக் காளையர் சிதறிவிடுவர்—என்று கருதினார். சென்னை நீதி மன்றத்தில், வழக்கு நடைபெறும்போது, சிங்காரமாகப் பேசி வந்தார், பொது மேடைகளில். களிப்பு பொங்கிற்று, அவர் கண்களில்—சர்க்காரின் குற்றச்சாட்டுகளை, தோழர்கள் மறுக்காதது கண்டு. இன்பம் எழுந்தது, அவர் இதயத்தில், கழகத்தின் எஃகுக் கம்பிகள்போன்ற இலட்சிய வீரர்கள், பூட்டப்படும் செய்தி கேட்கும்போதெல்லாம்.

'இவர்களைவரையும் பூட்டி விட்டேன்—அழியும் கழகம்—ஒழியும் எதிர்ப்பு—நானே, ராஜா! என்னைப் போலுண்டோ, யாரும், இவ்வுலகில்?', என்று கின்னாரம் கொட்டினார்—கித்தாப்பு பேசினார். இந்த 'வெற்றி'யைக் காட்டி, தன் கட்சிக்காரர்களிடம், தன்னுடைய பதவியை நீடிக்குமாறு, பேரங்கள் நடத்தினார். நாடு, தனக்குத் திறந்து விடப்பட்டு விட்டது — இஷ்டம் போல் வேட்டையாடலாம் எனும் கருத்தில், நினைத்த இடமெல்லாம் சென்றார், ஆச்சாரியார் — எண்ணியதை யெல்லாம் பேசிக் கொட்டினார்! ஆனால், அவர் கண்ட கனவு பலிக்கவில்லை—மாறாக, அவர் வீசிய விஷ வித்து, அவருடைய கபட நாடகத்தையே வெளிப்படுத்திற்று. கழகத்தின் கால் தூசைக்கூட, அவரது அடக்குமுறையின் மூலம், அகற்ற முடியவில்லை! கழகம்—பொதுச் செயலாளரையும் முன்னணி வீரர்களையும் சிறைக்குள் வைக்கப்பட்டுவிட்டதால் — கலங்கியது, உண்மை. ஆனால், கடமையாற்றத் தவறவில்லை!! "செல்கிறேன் தோழர்களே! திரும்பிவரும்போது, கழகத்தை பொலிவும் வலிவுமுள்ளதாக ஆக்கிக் காட்டுங்கள்," — இது தான், மூன்று மாதங்கட்கு முன்பு, சிறை புகுந்த பொதுச் செயலாளர் தன் சகோதரர்களுக்கு, விடுத்துச் சென்ற செய்தி.

அவரும் தோழர்களும், வரும் 30ந் தேதியன்று விடுதலையாகும் போது, பொலிவும் வலிவும் பெற்று, கழகம் ஜொலிப்பதை நிச்சயம், காண்பார்கள். கழகம், கடந்த நான்கைந்து மாதங்களில், தாங்கிக் கொண்டிருக்கும் பொறுப்புகள், கொஞ்சநஞ்சமல்ல. ஒரு பக்கம், அதிகாரச் சேட்டைகள்! மற்றோர் பக்கம், 'இவர்களும் வாழ்வதா?' எனும் வயிற்றெரிச்சலால் வாடுவோரின் குறும்புகள்!! வம்பர்கள், ஒரு பக்கம்—குறும்பர்கள், மற்றோர் பக்கம். இந்த நெருக்கடியில், எதையும் துச்சமென மதித்து, ஏறு நடைபோட்டு நடந்து செல்கிறது, கழகம்.

பொதுச் செயலாளருக்கும் தோழர்களுக்கும் மூன்று மாதம்—கல்லக்குடி அறப்போரைத் துவக்கியவருக்கு ஆறு மாதம்—கழகப் போரில் ஈடுபட்டோருக்கெல்லாம் சிறை வாசம்—சிலருக்கு சாவுப் பரிசு—பலருக்கு கால் ஊனம், கை நொண்டி—இவ்வளவு கன்றாவிக் கொடுமைகளை, காகுத்தனையும் கண்ணபிரானையும் துணைக்கழைக்கும் கருப்புக் கண்ணாடிக்காரர், வழங்கினார். மயங்கவில்லை, கழகம். அவரது, அடக்குமுறை விஷத்தை அள்ளிக் குடித்தும், அயராமல், தளராமல் பணியாற்றுகிறது.

அவர், எதிர்பார்த்தார்—இத்தனை அடக்கு முறைகளையும் தாங்காதவர்கள் தானே, இந்தக் கழகத்தார்! இப்போது, மண்ணோடு மண்ணாகி, மக்கி மடிந்து விடுவார்கள், என்று!! —மண்ணாகவில்லை, கழகம்; மலையாகியிருக்கிறது. "இருப்பது, ஏதோ

காஞ்சியில் வரவேற்பு விழா

1—12—53 மாலை 4 மணிக்கு

கண்ணன் டாகீஸ் மைதானத்தில்

சிறை மீண்டு திரும்பும்

பொதுச் செயலாளர் அண்ணாதுரை,

தோழர்கள்

சம்பத், நெடுஞ்செழியன், நடராசன்

ஆகியோருக்கு

வரவேற்பு விழா

தோழர் எ. கோவிந்தசாமி எம். எல் ஏ தலைமையில்.

அனைவரும் வருக! வருக!!

—நகர தி மு. க.

இரண்டு மூன்று வாரப் பத்திரிகைகள்—ஒரே ஒரு தின ஏடு; அதுவும் கைபகலகத்தில். இதை வைத்துக் கொண்டு, எப்படி, இருட்டைக் கடக்க முடியும் இவர்களால்? நம்மிடமிருக்கும் தின ஏடுகளின் சங்கைத் தினசரி முழக்கினால், திகைத்துப் போய் விடும். நாடு!". என்று கருதினார், அன்பர் ஆச்சாரியார்—ஆனால், அவரது கருத்து, குப்பைத் தொட்டிக்கு வீசியெறியப்பட்டு விட்டது, கழக வீரர்களால்—அவரே, பிறகு, "வாரப் பத்திரிகைகள் போதாதென்று, தினப் பத்திரிகையும் நடத்திக்கொண்டு, என்னைத் திட்டுகிறார்கள்" என்று சஞ்சல நாதம், எழும்பும்படி, செய்திருக்கின்றனர், கழகக் கண்மணிகள்.

இந்த நற்காட்சியினை, எங்கே காண முடியும்? தலைவர்கள், சிறையில்! முன்னணி வீரர்கள், கூண்டுக்குள்! முழு மதியை மறைக்கும் கார் மேகம்—ஏராளம்!! இவ்வளவு கடுஞ் சோதனைகளையும் தாண்டி, கழகம், பொலிவுடனும் வலிவுடனும் காட்சியளிக்கிறது—விடுதலையாகும் தன்னுடைய பொதுச் செயலாளரிடம் வெற்றிப் பட்டியலை நீட்டக் காத்துக்கொண்டிருக்கிறது.

இதயத்தைக் கிளறும் இக்காட்சியினை, எங்கே காண முடியும்? தளபதியில்லாத படை, தாறுமாறாகச் சிதறுமாம்! அரசனில்லாத குடிமக்கள், அங்குமிங்குமாக அலைவராம்! தலைவனில்லாத கட்சி, தன்னிஷ்டம்போல் ஓடி, மோதி, உருக்குலையுமாம்! உண்மைதான் — நிலவில்லாத வானத்தில், இருள்தான் படரும்—கதிரோனில்லாத உலகில் இருள்தான் குவியும் — ஆனால், இந்த உண்மையையும் பொய்யாக்கி விட்டனர், தி. மு. கழகத் தோழர்கள்! விண்மீன்கள், 'நிலவுகள்' ஆயின—விடிவெள்ளிகள் தூங்காது பணியாற்றின—பொதுச்செயலாளரும், முன்னணி வீரர்களும் இல்லையே எனும் கலக்கத்தைப் போக்கி, கழகத்தைக் கட்டிக் காத்து வருகின்றனர்.

'இப்படை தோற்கின், எப்படை ஜெயிக்கும்?' என்றார், மனோன்மணீயம் தீட்டிய பேராசிரியர், சுந்தரனார். அதனை, அடிக்கடி எடுத்துச் சொல்வதுண்டு, நமது பொதுச் செயலாளர். அதன் உண்மையை, இந்த மூன்று மாதங்கள் எடுத்துக் காட்டிவிட்டன! திராவிடத்தில் தோன்றியிருக்கும் இப்படை, இனி தோற்காது! இதனை வெல்ல இனி யாராலும் முடியாது!! — இப்படை வீண் குரோதத்தை வெண்சாமரமாகக் கொண்டு, வேண்டாத சேட்டைகளை பீடமாகக் கருதி, காண்போரை யெல்லாம் விரோதிகளாக எண்ணி, கனவுக் கோட்டைக்குள் பவனிவரும் சாளான்களைக் கொண்டதல்ல; கருத்தில் தெளிவும், இதயத்தில் புத்துணர்வும் இலட்சியத்தில் நம்பிக்கையும், எடுத்த காரியத்தை முடிக்கும் திறனும் பெற்ற விடுதலைப் படை—வெற்றிப் படை—வேலும் வாளும் தாக்கினாலும், பீரங்கி குண்டுகள் துளைத்தாலும், பின்னடையாத திராவிடப் படை.

இது, நீதியைக் கவசமாகக் கொண்டது! நேர்மையை விளக்காக ஏந்தியிருப்பது! உரிமைக்காகப் போராடுவது! கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும் தன்னுடைய கண்களாகக் கொண்டது! உண்டு உறங்கியபடி, 'ஏதோ செய்தோம்' எனும் உஞ்சவிருத்திக் கூட்டமல்ல, இப்படை. உதய தாரகைகள்போல் மின்னி, மறைந்துவிடும் போலிப் படையல்ல, இது; பொன்னவிர் உள்ளமும், பொங்கும் உணர்ச்சியும், எதையும் தாங்கும் இதயமும், ஈட்டிகள் பாயினும் இமைகொட்டாது

மாவட்டத் தோழர்களே!

காஞ்சியில் நடைபெறும் பொதுச்செயலாளர் வரவேற்பு விழாவில் வந்து கலந்துகொள்ளுமாறு பணிவன்போடு வேண்டுகிறேன்.

சி. வி. எம். அண்ணாமலை

ஏறு நடைபோடும், வீரமும் கொண்ட, அறிவுப்படை!

அருவிபோல் பாய்ந்து, இன்பம் செழிக்க, எப்போதும் பாடுபடும், அமைதிப்படை! — இதனை, அறியவில்லை, ஆச்சாரியார். இந்தப் படையை இயக்கும், ஜீவசக்தியின், பெருமையையும் உணரவில்லை. இதனைத்தான், ஏளனமாகக் கருதினார்! தீர்ந்துபோனார்கள்—என்றார். இனி, என்ன செய்யமுடியும்? — என்று கேட்டார். என்னையா, எதிர்க்கிறீர்கள்?—என்று மிரட்டினார். அவரிடம் என்னென்ன உண்டோ, அவைகளையெல்லாம், அள்ளி வீசினார். அடைத்தார் — அடித்தார்— துளைத்தார்—பிணமாக்கினார். எனினும், இதோ, ஒளிவீசியபடியே, பவனி, வந்துகொண்டிருக்கிறோம்! இந்தப் பவனிக்கேற்ற விடுதலைப் பாதையை, கடந்த நான்காண்டு காலத்தில், செப்பனிட்டுவிட்டது திராவிட முன்னேற்றக் கழகம். திசையறியாது திகைத்த, திராவிட சமுதாயத்தின், கலங்கரை விளக்கமாகிவிட்டது, திராவிட முன்னேற்றக் கழகம். இந்த உண்மையை, எதையும் உணர மறுத்த ஆச்சாரியாரே, உணரும்படிச் செய்திருக்கிறது—தன்னுடைய தலைவர்களில்லாதபோதும், தானாற்றிய பணியினைக் காட்டி.

இதனை, எதிர்பார்க்கவில்லை, ஆச்சாரியார்! சிறையைத் திறந்து விட்டோம்; தீர்ந்தது — துப்பாக்கியை முழக்க விட்டோம்; ஒழிந்தனர்— வழக்குகளை வீசிக் கொண்டிருக்கிறோம்; அடங்கிற்று — என்று, 'ஆனந்தலகரி' பாடிக்கொண்டிருந்த ஆச்சாரியார், இன்று, இந்த மூன்று மாதமும் கழிந்து போயிற்றென்றறிந்தும்—தலைவர்கள், வெளியே உலாவப் போகின்றனர் என்பதை எண்ணியதும் — என்ன செய்வதென்று, விழிக்கிறார்! திகைக்கிறார்!! விழிப்பும் திகைப்பும், ஒரு மனிதனுக்கேற்பட்டு விட்டால், 'ஏதாவது செய்வோம்!' எனும் கட்டத்துக்கு வந்துவிடுவானல்லவா. அந்த, 'ஏதாவது செய்யும் கட்டத்துக்கு' வந்து விட்ட காரணத்தினாலேயே, மீண்டும் தலைவர்கள் மீது வழக்கை வீசுகிறார். இப்படி வழக்கை வீசியதால், இடக்கு செய்யும் தன் கட்சிக்காரர்களிடம் செல்வாக்கு பெற்று தன் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள ஏது கிடைக்குமென்று, எதிர்பார்க்கிறாராம். இந்த சுயநலத்துக்காக, நம்முடைய தலைவர்கள் மீது, புனர் விசாரணை செய்ய விரும்புகிறாராம்!! ஆஸ்திரேலியத் தலைவர் புகழ்கிறார்—அமெரிக்க தூதர் பாராட்டுகிறார் — என்றெல்லாம் புகழப்படுகிற ஆச்சாரியார், நம்மைக் காட்டினால்தான், நாடாள முடியும் என்கிற நிலைமைக்கு வந்துள்ளாரென்றால், அவரது கட்சியின் நிலையையும், அவரது அரசியல் பணியின் அநாகரீகத்தையும், நாம் எடுத்துச் சொல்ல வேண்டாம் — நானிலம், பேசும்.

இன்று விடுதலையாகும் பொதுச் செயலாளரையும் தோழர்களையும், வரவேற்க, சிறைச்சாலை காத்திருக்கிறது!—அறிவோம், நாம். சிறைச்சாலைகள் மூடுவதும், திறப்பதும்— இன்று, நமக்கு சகஜமான சம்பவங்கள். அதிலும், நம்போன்ற ஆற்றல் வீரர்களைக் கொண்டிருக்கிற கழகத்துக்கு, அழுகும் கட்சிகளைத் தாங்கிக்கொண்டிருப்போர், அடிக்கடி சிறைச்சாலைகளைத் திறப்பதும் மூடுவதும், மிக மிகச் சாதாரணச் சம்பவங்கள்தான். எனினும், 'இருள் படரும்' என்று ஆச்சாரியார் எதிர்பார்த்த இந்த 'மூன்று மாதத்தில்' நாம் என்னென்ன செய்தோமென்பதை, பொதுச்செயலாளருக்கும், சிறையில் வாடும் அவரது கழகக் காளையருக்கும் தெரிவிப்போம்.

இடைவெளி, சிறிது கிடைத்திருக்கிறது — நாமும், அவரும், பேச! மகிழ!!

இந்த இடைவெளியில், நமது பணியினைக் கண்டு மகிழும் வாய்ப்பினை நாம் அளிப்போம். வாய் பிளந்தவாறு, சிறைச்சாலை, தயாராக இருக்கிறது, அவர்களுக்கு.

எனினும, நம்மை, அவர் காணவும், அவரை நாம் காணவும், சிறிது இடைவெளி கிடைத்திருக்கிறது. இதுவரையில், மகிழ்வோம்! மனமகிழ்ச்சி கொள்வோம்!!

★

திராவிட நாடு
பொங்கல் மலர்

சி. என். ஏ. தீட்டும்
கதை, கட்டுரைகள்
தாங்கி

*

அதிக பக்கங்களுடன்

*

அழகிய முகப்புடன்

*

சிந்தனைச்
சித்திரங்களுடன்

*

கருத்து விருந்தளிக்கும்!

*

இந்த மலர்,
ஒரு வரலாற்று
ஓவியம்

விலை ரூ 1.

★

சந்தாதாரர்கள் டிசம்பர் 30-ந்தேதிக்குள், ரூ 1, அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஏஜண்டுகள் டிச. 30-ந்தேதிக்குள், மலரின் தேவையையும் அதற்குரிய, தொகையையும் அனுப்பவேண்டும்.

முன்பணமில்லாதோருக்கு கண்டிப்பாக மலர் அனுப்பப்படமாட்டாது.

நிர்வாகி.

வளரும் விஞ்ஞானம்

டெலிவிஷன்

'காலம் கெட்டுப்போய்விட்டது!'—என்று பழமை விரும்பிகள் பேசுகிறார்கள். அன்பர் ஆச்சாரியார், விஞ்ஞான விளைவுகளின் ஆபத்தைப்பற்றி, அடிக்கடி பேசத் தவறுவதில்லை. அண்மையில், நீர் ஊற்றுக்களிலிருந்து தண்ணீர் இறைக்கும் 'பம்பு'களைப்பற்றிக்கூட கேலி செய்தாராம்! ஆனால், இதுபோன்றவர்களின் கேலியை, வளரும் விஞ்ஞானம், லட்சியம் செய்யவில்லை. அது வளர்ந்துகொண்டே போகிறது. அதன் விபரத்தைப்பற்றிய கட்டுரை, இது. 'டெலிவிஷன்'—எங்கோயிருப்பவரையெல்லாம், இக்கண்டுபிடிப்பின்மூலம், நாம் காணலாம்! அவர்கள் பேசுவதைக் காணலாம்!! ரேடியோபோல உல்லாசத்துக்குமட்டுமே உபயோகமாகும், இ வ—என்றே எல்லோரும் எண்ணிவருகின்றனர். இதனால், இன்னும் பல நன்மைகளைப் பெறலாம், என்கிறார், கட்டுரையாளர். கட்டுரை 'Discovery' எனும் விஞ்ஞான ஏட்டில், வெளிவந்தது:—

சிறந்த பொழுதுபோக்குச் சாதனமாக டெலிவிஷன் இருப்பது பற்றி மாறுபட்ட அபிப்பிராயம் இருந்தாலும், கைத்தொழிலுக்கும் ஆராய்ச்சிக்கும் அது மிகவும் உதவியாக இருக்கும் சாதனம் என்றே கூறவேண்டும். டெலிவிஷன் காமிராவினால் மிகவும் நுணுக்கமாகப் படம் பிடிக்கமுடியும். படத்தைத் திரையிடும்போதுதான் அதன் அற்புத சாதனை தெரியவரும். வேறு எந்த விதமான சாதனத்தாலும் கிடைக்கமுடியாத வசதி, டெலிவிஷன் திரைக்குத்தான் உண்டு. சினிமா புரொஜெக்டர், திரை, இவற்றின்மூலம் படத்தைத் திரையிடலாமே என்று கூறலாம்.

படம் பிடித்தல், அசல் படத்தை (நெகடிவ்) சுத்தம் செய்து நகல் எடுத்தல், வெட்டு ஒட்டு வேலை செய்தல், திரையிடுதல் என்று பல கட்டங்கள் சினிமாவுக்கு உண்டு. இதற்கு வேலையும் காலமும் பிடிக்கும். டெலிவிஷனில் படம் எடுக்கும்போதே திரையிடக்கூடிய வசதி ஏற்பட்டுவிடுவதால், இவை மிச்சப்படுகிறது. கைத்தொழில் அபிவிருத்தி, வைத்திய ஆராய்ச்சி ஆகிய துறைகளில் டெலிவிஷன் அபார சேவை செய்திருக்கிறது. வைத்தியத் துறையில் சத்திர சிகிச்சை நடக்கும் மேஜையின்மேலே, டெலிவிஷன் காமிராவைப் பொருத்திவிட்டால், சத்திர சிகிச்சை செய்யும் ஆசிரியருடனிருக்கும் மாணவர்களைத் தவிர, வேறு பல மாணவர்களும், மற்றோர் அறையிலிருந்தவாறே நடப்பதை அறிந்துகொள்வது சாத்தியமாகிறது. இதனால், சத்திர சிகிச்சை நடக்குமிடத்தில் சுற்றியுள்ள ஐந்தாறு மாணவர்களுக்குமட்டுமே போதிக்கும் நிலைமை மாறி, பக்கத்து அறையிலிருப்பவர்களுக்கோ, வைத்திய மகாநாட்டுப் பந்தலில் கூடியுள்ள அனைவருக்குமோ, சத்திர சிகிச்சை மேடையைத் தெளிவாகப் பார்க்கும் வாய்ப்பும் வசதியும் கிடைத்துவிட்டது. நேர் கண்ணுக்குத் தெரியாத கோணங்களையும் டெலிவிஷன் காமிராவினால் படம் பிடிக்கமுடியும் என்கிறார், டாக்டர் அட்கின்ஸ்.

இதனால் சத்திரசிகிச்சை போதனை சுலபமாகிவிட்டது.

பார்வைக்குப் புறம்பாக உள்ள கோணத்தைப் படம் பிடிக்க முடியும் என்பதுபோல, பார்வைக்கு அப்பால் உள்ளவைகளையும் டெலிவிஷனின் உதவியினால் கைவசப்படுத்தி இயக்கமுடியும். கைக்கெட்டாத தூரத்திலிருக்கும் மீட்டரின் முள் ஓடுவதைப் பார்க்கவும், தூர இருந்தபடியே இயந்திரங்களைக் கவனித்து ஓ டவும் முடியும். ரேடியக் கிரண கிளர்ச்சியுள்ள பொருள்களைக் கையாளுவதற்கு அமெரிக்காவிலுள்ள ட்ரூ மாண்ட் ஆய்வுக்களமும் "ஆர்கோன்" தேசிய ஆராய்ச்சிசாலையும் சிக்கலும், நுணுக்கமும் நிறைந்த சாதனங்களை உபயோகிக்கின்றன. அவற்றில் டெலிவிஷன் காமிராதான், முக்கிய ஸ்தானம் வகிக்கிறது. ரேடியோ கிரணங்களின் வீச்சுக்கு வெளியே நின்று கொண்டு டெலிவிஷன் காமிராவின் உதவியினால் அவற்றைக் கையாள முடிகிறது.

மிகவும் பெரிய இயந்திரங்களை இயக்குவதற்கும் இப்போது டெலிவிஷன் காமிரா பயன்படுகிறது. சமீபத்தில் நடந்த யந்திர சாதன கண்காட்சியில் நேர் பார்வைக்கு அப்பாலுள்ள ஓர் சாமான் தூக்கியை டெலிவிஷன் காமிராவின் உதவியினால் ஓட்டுவது நிதர்சனமாக்கப்பட்டது.

ஆழ் கடலுக்கு அடியிலுள்ள பொருள்களைக் கண்டுபிடிக்க டெலிவிஷன் உதவுகிறது. மூழ்கிப்போன ஆப்ரே என்ற நீர் மூழ்கிக் கப்பலிருக்குமிடத்தைக் கண்டு பிடிக்க டெலிவிஷன் பயன்பட்டது. ஆழத்தில் வெளிச்ச மூட்ட பெரிய விளக்குகளை காமிராவுக்குச் சூழப் பொருத்தினார்கள். மனிதன் இறங்க முடியாத ஆழத்திலும் டெலிவிஷன் காமிரா சென்று அங்குள்ளவற்றைப் படம் பிடித்துக் காட்டிவிடுகிறது. ஆழ் கடலில் வசிக்கும் ஜந்துக்கள், நீருக்கடியிலிருக்கும் தரையில் வளரும் செடிகள், தாதுப் பொருள்கள் இவற்றை எல்லாம் படம் பிடிக்க டெலிவிஷன் காமிராவை உபயோகித்து ஸ்காட்டிஷ் சமுத்திர ஜந்து நூல் சங்கத்தாரும் டாக்டர் ஹெறால்ட் பார்னஸ்ஸும் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

கோவை முரசு

வெளியீடுகள்!

இதற்கா எங்கள் தியாகம்?
ஆசிரியர் எ. எஸ். மாணிக்கம்
தனிப்பிரதி விலை 0—4—0

"பாசவலை"
ஆசிரியை எஸ். பி. மீனாட்சியம்மாள்
தனிப் பிரதி விலை 0—8—0

"கற்கோட்டையில் காதல்"
ஆசிரியை எஸ்.பி. மீனாட்சியம்மாள்.
தனிப்பிரதி விலை 0—8—0

வியாபாரிகளுக்கு 25% கமிஷன் உண்டு. உடன் எழுதுக, V. P. கிடையாது.

விவரங்களுக்கு:

ஆசிரியர் "கோவை முரசு"
120, வெஸ்ட் [illegible]
[illegible] சென்னை-3

பொதுச் செயலாளர்

அண்ணாதுரை

தோழர்கள்

சம்பத், நெடுஞ்செழியன், நடராசன்

ஆகியோர்

நவ. 30 காலை 9 மணிக்கு

சென்னை சிறையிலிருந்து

விடுதலையாகிறார்கள்.

தொழில் துறையிலும் டெலிவிஷன் அதிபற்புதமான சேவை செய்கிறது. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் படத்தை அனுப்பவும், விளக்கங்கள் கூறவும் டெலிவிஷன பயன் படுகிறது. நவீன டெலிவிஷன் காமிரா பதி மூன்று ராத்தல் எடையும் ஓரடி உயரமும் உள்ளதே. மிகவும் நுணுக்கமாகப் படம் பிடிக்கும் போதுதான் ஒலி — ஒளி பரப்பு சாதனங்களையும் அவற்றுடன் இணைந்த யந்திரங்களையும் உபயோகப் படுத்த வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் ஓர் ஒதுப்புறமான இடத்தில் இந்தக் காமிராவை வைத்து ஓட்டலாம்.

வான சாஸ்திர ஆராய்ச்சியிலும் டெலிவிஷன் முக்கிய ஸ்தானம் வகிக்கத் தொடங்கிவிட்டது. மிகவும் மங்கலாகத் தெரியும் பொருள்களைக் கூட மின்தாதுக் கிரணங்களின் உதவியினால் பதிய வைத்து படம் பிடித்து விட முடிகிறது. கோடிக்கணக்கான மைல்களுக்கப்பால் இருக்கும் நட்சத்திரத்தின் உருவததை, மெல்லிய கோடுகளைப் போல் காட்டினாலும் வேறு பல புகைப்பட சாதனங்களை உபயோகித்து தெளிவான உருவத்தைத் திரையில் வீச டெலிவிஷன் உதவுகிறது.

அதிவேகமாக ஓடும் பொருளையும் சுழலும் யந்திரங்களையும் படம் பிடித்து, வேகம், ஓட்டம், இயங்கும் என்று பல துறைகளில் ஆராச்சி செய்ய நவீன புகைப்பட சாதனங்களிருந்தாலும் டெலிவிஷனுக்கு இணையாக அவற்றைக் கூற முடியாது. வேகத்தைப் படமெடுத்தாலும் படத்தை திரையிட்டுப் பார்க்கச் சாதன வசதிகள் வேண்டும். டெலிவிஷன் காமிராவோ உடனுக்குடன் படமெடுப்பதுடன், ஞாபகசக்தியைப் போல சிறிது காலந் தாழ்ந்து படத்தைக் காட்டவும் வேகம், நேரம் விகிதத்தைக் குறைத்துக் காட்டி. தெளிவாகச் செய்யவும் பயன படுகிறது. மிகவும் நுணுக்கமான இசைப்பு, இணைப்பு, இயக்கக் கட்டுப்பாடினால்தான் 'இது சாத்தியமாகிறது. மிகவும் நுண்ணிய பொருள்களை மைக்ராஸ்கோப்பினால் பார்த்தாலும், தெளிவான [illegible]ரிய படத்தைத் திரையில் காட்ட டெலிவிஷன் உதவுகிறது. சக்தி வாய்ந்த எதிர் மின் வாய்க் கிரணங்களை ஓர் குழாய் மூலம் பார்க்கும் பொருள் மீது வீசி, படத்தைப் பெரியதாக்கித் திரையில் வீசுவதால், சாதாரண வெளிச்சத்தின் உதவியால் மைக்ராஸ்கோப்பின் மூலம் பார்க்கும் படத்தைவிட தெளிவும் நுணுக்கமும் நிறைந்த படத்தைக் காண முடிகிறது.

நுண் பொருள்களைப் பிரித்துக் காட்டும் முறை ஆராய்ச்சியில் அவசியம். அவற்றின் பரிமாணம், அளவு, எண்ணிக்கை இவைகளைத் தெரிந்துக்கொள்ள நவீன சாதனங்கள் பயன் படுகின்றன.

ஸ்கானிங் (தனிப்பிரி) உத்தியினால் மைக்ராஸ்கோப் உபயோகத்தில் விசேஷ அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. மிகவும் விலையுயர்ந்த எலக்ட்ரான் மைக்ராஸ்கோப்புக்கு பதில் ஸ்கானிங் மைக்ராஸ்கோப்பைவிடச் சிறந்த முறையில் இது பயன்படுகிறது.

வர்ண விசித்திரங்களைப் படம் பிடிப்பதில் ஓர் விசேஷ முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. விசேஷ சாதனங்களில்லாமல், காமிராவுக்கும் திரைக்கும் கம்பி இணைப்பும் இயக்கும் கம்பியும் பொருத்திவிடுவதன் மூலம் வர்ணப் படங்களைத் திரையிடுவது இப்போது சாத்தியமாகிவிட்டது. கல்வித் துறையில் இது விசேஷ லாபமாகும். சத்திர சிகிச்சையைக் காட்டப் படம் பிடிக்கும்போது, தசைகளின் வர்ணங்களையும் ரசாயன சேர்க்கையினால் அவை மாறும் நிறங்களையும் அப்ரே[illegible] [illegible]ஜக்கு [illegible] இருக்கும் மாணவனுக்குக் காட்டுவது இப்போது சாத்தியமாயிற்று.

சுலபமாக எடுத்துச் செல்லும் வர்ணக் காமிரா, திரை, படம் வீசும் யந்திரம் இவற்றின் உதவியினால் சிறப்பாகக் கல்வி போதனை செய்ய முடியும். ஆனால் அதைக் கையாளவும், பொருள் விளக்கம் கூறவும் விற்பன்னர்கள் வேண்டும். விஞ்ஞான விஷயங்களை அழகுறச் சொல்லவும், கவர்ச்சிகரமாகப் படம் பிடிக்கவும், ஓர் சாரார் பயிற்சி பெற்றால்தான், இந்தத் துறையில் டெலிவிஷனின் உபயோகம் பூர்த்தி பெற்றதாகும். பொதுவாக, பொழுது போக்கு சாதனமாகப் பயன்படும் டெலிவிஷன்; அப்போதுதான், வாழ்க்கையில் பயனுள்ளதாகும். பொழுதுபோக்குக்காக டெலிவிஷன் 'ஸெட்டுக்கு' முன்னால் உட்காரும் மக்கள் விஞ்ஞான நுணுக்கங்களை ரசிக்கவும் சுவையுள்ள படமும் பேச்சும் உருவாகும் காலம் அதிசீக்கிரம் வரும் என்று எதிர்பார்ப்போம்.

❀

சென்னையில்
கருணாநிதி

29-11-53 மாலை 5-மணிக்கு. எழும்பூர் மைதானத்தில் சிறை மீண்டு வரும் தோழர் மு. கருணாநிதி அவர்களுக்கு பாராட்டு அளிக்கப்படும். அன்று பிற்பகல் 3-மணிக்கு, எழும்பூர் புகைவண்டி நிலையத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்படும்.

ஓநாயும் நாமும்

"யார், அவர்கள்?" — என்று முழக்கமிட்டானும், சேரன் செங்குட்டுவன்; தன்னிடம்வந்து, 'இழிசொல் உரைத்தனர் வேந்தே. என்னையும் உங்களையும், இந்த நாட்டையும் ஏசிப் பேசினர்' எனும் செய்தி தந்த தூதர்களை, நோக்கி.

"அங்கத்திலா! வங்கத்திலா! எங்கிருக்கிறார்கள், அவர்கள்?"—என்ற செங்குட்டுவனின், வீராவேசம், கண்ட தூதுவர், 'வடநாட்டில்!" என்று மொழிந்தனராம்.

கேலி, கிளம்பிற்றும், செங்குட்டுவன் குரலில்! "கங்கைக்கரை, காவிரிக் கரையை ஏளனமா, பேசிற்று? தர்ப்பை யேந்தியோர், வாளேந்திகளிடமா, வாலையாட்டுகின்றனர்? எங்கே நம் வேல்! புறப்படுக, வீரர்காள்!" என்று பொங்கி எழுந்தானும். புறப்பட்டுச் சென்றானும்.

தமிழ் மாநிலத்தை இழி மொழியால் அர்ச்சித்த, ஆரிய மன்னர்கள் கனகவிசயர் தலையில் கல்லேற்றி வந்து கண்ணகிக்குச் சிலை செய்தானும்! பழிதீர்த்துக் கொண்டானும்!!

*

படித்திருக்கிறோம், இதனை. காவியத்தில் இந்த வரிகளைப் படிக்கும் போது, நம் உள்ளங்களில், ஒரு வகை குதூகலம் பிறக்கும். தமிழிடத்தில் சேர இளவனுக்கிருந்த பற்றும், தமிழ் மாநிலத்தின்மீது அதனையாண்ட மன்னவனுக்கிருந்த பெருமையும், தமிழ் மக்களை எவரேனும் இகழ்ந்தால் அவருக்குப் பாடம் புகட்டும் பண்பும், நிறைந்த அந்த மாவீரன் செங்குட்டுவன், நம் சிந்தையில் களிநடனம் புரிகின்றான். செங்கோலேந்தியவன், சீமாட்டிகளின் புன்னகையோடும், பாவலர்களின் பாராட்டுக் கவிதைகளோடும், மக்கள் செலுத்தும் வரிகளை வாங்குவதோடும், இருந்து விடவில்லை — தமிழைத் தன் கண்ணென மதித்தான்—தமிழ் மாநிலத்தைத் தன் உயிரென எண்ணினான்—'தானே, தமிழ் மக்கள்' என்ற கருத்துக் கொண்டான் — எனவே, தமிழகத்தை இகழ்ந்தவனை விடேன். எனும் வீரச் சொல் கிளப்பி, வெற்றி கண்டான். இந்த மாவீரனின் கதையைப் படித்தோர், நாம்! அதனை நினைந்து நினைத்து உருகுவோர், நாம்!! — ஆகவேதான், ஆச்சாரியாரது ஆட்சியில், டில்லிக்கரைவாசி நேரு பண்டிதர் நிந்தனை மொழி புகன்றதும். நம்மால் தாங்க முடியவில்லை. தமிழகத்தார், செய்த ஒரு அறப் போரினைக் குறித்து, 'நான்சென்ஸ்!' என்றார், பண்டிதர். அவர் வீசிய சுடுசொல்லைக் கேட்ட, தமிழகம், சீறிற்று. ஆனால் தமிழகத்தை ஆளும் பாக்கியம் பெற்ற, ஆச்சாரியாரோ, குளிர்ந்த மனதுடனிருந்தார்—கூறவில்லை, சிறு சொல். அவருக்கு ஆனந்தம் பிறந்தது. அச்சொல் கேட்டபோது! ஆதவிஞற்றுன். 'நான்சென்ஸ்' என்று பண்டிதர் வீசிய பதட்டச் சொல் கேட்டும், பேசாதிருந்தார். பெருமூச்சுவிடவில்லை—பூரிப்போடு உலவினார். பண்டிதர்வீசியசொல், அவருக்கு பரவசத்தை உண்டாக்கிற்று, காரணம், ஆச்சாரியார், செங்குட்டுவன் பரம்பரையல்ல; கனகவிசயர் பரம்பரை!! ஆகவே, டில்லிவாசி வீசிய சுடுசொல்கேட்டும், அதனைக் கண்டிக்கவோ அல்லது அவரது சார்பில்தான் மன்னிப்பு பெறவோ முன்வரவில்லை. உள்ளத்திலிருந்தால் தானே, வாயில் வரும்! உள்ளமோ, கள்ளர்குகை. செயலோ, சிறுத்தை. எங்கிருந்துவரும், இந்த நற்பண்பு. —இதனைக் கண்டோம், நாம். தமிழ் நிலம், கண்டது இதனை. வெந்தது, வேதனையால். நொந்து கொண்டது தன்னிலை கண்டு. சுடுசொல்வீசிய பண்டிதருக்குத் தன் கண்டனத்தைக் காட்டவேண்டுமென்று ஜூலை 15-ந்தேதி. அவருடைய ரயில் இலாகா அபாயச் சங்கிலி மூலம் தன் ஆத்திரத்தை, அறிவித்துக்கொண்டது. படையெடுக்கவில்லை! பண்டிதரின் இலாகாவைப் பாழக்கவுமில்லை!! அமைதியோடு, தமிழகம், தன் ஆத்திரத்தைக் காட்டிக்கொண்டது. ஆனால், அதுகண்டு, கொதித்தார், இக் குல் லுகபட்டர்! 'நமக்கென்ன?' என்றிருக்கவில்லை. "நாம் ஆளும் மக்களை, நேருபண்டிதர் இகழ்ந்தது, தவறுதானே? நாமோ, மக்களின் தலைவர் என்றல்லவா, கூறிக்கொண்டிருக்கிறோம். மக்களையிகழ்ந்தாலென்ன! நம்மையிகழ்ந்தாலென்ன!! —இரண்டும், ஒன்றுதானே?" என்று கருதவில்லை எப்படிக் கருதுவார்? இவர் என்ன சேரன் செங்குட்டுவனா! அல்லவே—கனகவிசயர்தானே!!

அதனால், அன்றைய தினம், பழிதீர்த்துக்கொள்ள படை வரிசைகளைத் திரட்டினார். கனகவிசயர் காலத்திலில்லாத வசதிகள், இக் காரியவாதியின் காலத்திலிருக்கும் போது என்ன கவலை? துப்பாக்கிகள் துடைக்கப்பட்டன! தடிகள் சுத்தம் செய்யப்பட்டன! குண்டுகள் திணிக்கப்பட்டன! கவசமணிந்தோர்கள் புறப்பட்டனர்! டில்லிவாசிக்குப் பாடம் போதிக்கப் புறப்பட்ட செங்குட்டுவன் பரம்பரையினர்மீது இவை யாவும் வீசப்பட்டன. ஆறுவர் பிணமாக வீழ்ந்தனர்! நூற்றுக்கணக்கானோர் கை, கால்களை இழந்தனர்! தமிழகக் குடும்பங்களிலே 'ஐயோ' என்றலறல் எழும்பிற்று—தனயனை இழந்த தாயும், கணவனை இழந்த மனைவியும், தந்தையை இழந்த குழந்தைகளும், தவித்தனர்—துடித்தனர். இந்தத்துயரமட்டும் போதாதென்று, ஐயாயிரத்துக்கு மேற்பட்ட வாலிபர்களை சிறைக்குள் பூட்டினார், ஆச்சாரியார். சட்டத்தை வீசினார்! கொட்டடிக்குள் பூட்டினார்!! இந்தக் கொடுமைகளோடு, நிறுத்திவிடவில்லை. தி. மு. க. முன்னணிவீரர்களையும், பொதுச்செயலாளரையும், இழுத்துச் சென்று, வழக்குப்போட்டு, சிறைக்குள் அடைத்தார் — 'மூன்று மாதம்' வாங்கித்தந்தார். 'மூன்று மாதம்' முடிந்து அவர்கள் வெளியே திரும்பும் நேரத்தில். மீண்டும் மூடிவைக்க முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறார். தன்னினத்தை இகழ்ந்த மாற்றாரின் மனத்திமிரைக் கண்டிக்க, அறப்போர் புரிந்தமைக்கு. இத்தனை விசமான கொடுமைகள்! இவ்வளவு அட்டகாசங்கள்!! ஒருநாள் ரயிலைப் பிடித்து நிறுத்தியதற்கு, ஆறு பிணங்களும், இவ்வளவு அடக்குமுறைகளும் பரிசாகக் கிடைத்தன. இந்த அறப்போரின் தலைவர்களை, சிறைக்குள்ளே மூடிவைக்கவும் திட்-

டம் தீட்டப்படுகிறது. ஆனால், நேற்று முளைத்த ஆந்திரத்தில், இதோ ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது! அங்குள்ள மக்கள், கடந்த 23-தேதி, ரயிலை நிறுத்தி தமது கண்டனத்தைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

சென்னைக்குச் சென்றுகொண்டிருந்த ஒரு ரயிலை, சீராளாவுக்கு அருகே, ஆயிரம்பேர் தடுத்தனர். அதுபோல, விஜயவாடாவுக்குச் சென்றுகொண்டிருந்த கூட்ஸ் ரெயிலையும் தடுத்து, ஒரு மணி நேரத்துக்குமேல் நிறுத்தினர்.

எங்கேயோ இருக்கும் டில்லிக்காரருக்காக அல்ல, தங்கள் மாகாணச் சர்க்காரின் போக்கைக் கண்டித்தே, அவர்கள், இந்த அறப்போரிலீடுபட்டனர். ஈடுபட்டோர் நெசவாளர்கள்.

ஆந்திர சர்க்கார், ஆத்திரம் கொள்ளவில்லை. ஆச்சாரியாரைப் போல நடந்துகொள்ளவில்லை. துப்பாக்கி முழங்கவில்லை! பிணங்களைத் தரவில்லை! கால், கை போகவில்லை! சிறைச்சாலைகள் நிரம்பவில்லை! அதற்குப் பதிலாக, எதற்காக அந்த ரயில்களை நிறுத்தினார்களோ, அந்தக் கோரிக்கையை சர்க்கார், ஏற்றுக்கொண்டுவிட்டது.

நெசவாளர் தலைவர் பிரகடகோட்டையா, ரேபள்ளி எனுமிடத்தில் 144ஐமீறி கூட்டம் நடத்தியதற்காக நான்கு மாதம் தண்டிக்கப்பட்டார். இத்தண்டனையை எதிர்த்தே, நெசவாளத் தோழர்கள், ரயில் நிறுத்த அறப்போரிலீடுபட்டனர். தமது, அதிருப்தியையும் ஆத்திரத்தையும் காட்டினர்.

"என் சர்க்காரின் போக்கைஇந்த மக்கள் கண்டிப்பதா? என்ன திமிர், இவர்களுக்கு! இதுகள் கூற, நான் ஏற்றுக்கொள்வதா?" என்று பிரகாசம் சர்க்கார் பிடிவாதம் செய்யவில்லை.

மக்களின் ஆத்திரத்தையும் அதிருப்தியையும் கண்டதும், உடனே, நான்குமாதத்தண்டனையையும் ரத்துசெய்து, தோழர் பிரகடகோட்டையாவை விடுதலை செய்யும்படி உத்திரவு பிறப்பித்துவிட்டது. அவரும், அசெம்பிளி கூட்டத்தில், கலந்து கொள்ள, குண்டூரிலிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

ஆனால், இங்கோ! டில்லியிலிருப்பவருக்கு அதிருப்தியைக் கூற முயன்ற நம்மை, சித்ரவதைப்படுத்தினார், ஆச்சாரியார். தலைவர்களின் மீது விதிக்கப்பட்ட தண்டனையை ரத்துசெய்யவில்லை; மாறாக, மீண்டும் அடைக்க திட்டம், தீட்டுகிறார்.

ஆந்திர நெசவாளர்களின் அறப்போர், மாகாண சர்க்காரின்மீது.

நம்முடையதோ, இந்த ஆச்சாரியார் மீதல்ல—டில்லியின் மீது.

தன் சர்க்காரின் மீது குமுறும் நெசவாளர்களைப் பழிவாங்கவில்லை, பிரகாசம்!

ஆச்சாரியாரோ, டில்லி சர்க்கார் மீது அதிருப்தி காட்ட முயன்றதற்காக, நம்மீது பழிவாங்க முனைகிறார்!!

பிரகாசம், பெரிய முற்போக்குவாதியல்ல—எனினும், மக்கள்குரலை மதித்திருக்கிறார். ஆச்சாரியாரோ, மக்கள் குரலை, மிதித்திருக்கிறார்.

அந்தளவுக்கு நம்மீது, ஆத்திரமும்ஆவேசமும், ஆச்சாரியாருக்குத் தாண்டவமாடுவதேன்? — டில்லியிலிருப்போரை எதிர்த்தால் கூட, கச்சை கட்டி, நம்மைப் பழிவாங்க முனையும் இவரது போக்குக்குக் காரணமென்ன?—

'ஓநாயும், ஆட்டுக்குட்டியும்'— என்ற கதை உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கும். தன்னைக் கண்டு பயந்த ஆட்டுக் குட்டியை, எப்படியாவது கொன்று தின்ன வேண்டுமென்று உலவிய ஓநாயின் நிலையை அறியலாம், நீங்கள். ஓடும் அருவியின் கீழ்க் கரையில் நீர்அருந்தினாலும் குற்றம், மேல் கரையில் சென்று நீர் குடித்தாலும், தண்ணீரைக் கெடுப்பதாகக் குற்றம்!! கூறி, ஆட்டுக் குட்டியை அடித்திட முனைந்ததாம், ஓநாய். 'ஐயா, நான் என்ன பிழை செய்தேன்!'— என்று கேட்டதாம், ஆடு. 'தண்ணீரைக் கலக்குகிறாய்?'— 'நானா! நான் கீழ்ப் பக்கத்திலன்றோ, நிற்கிறேன். ஓடும் நீர் உங்கள் பக்கம் வராதே. நீங்கள் மேலேயன்றோ, நிற்கிறீர்!'—'அதனாலென்ன? நீ, கலக்காவிட்டால், உன் முன்னோர்கள் கலக்கியிருக்கலாமல்லவா!' என்று பதிலுரைத்து, பாய்ந்ததாம், ஓநாய். அதே சுபாவந்தான், ஆச்சாரியாருக்கு. எப்படியாவது, நம்மை பழிவாங்க முனைகிறார்— ஏது சொல்லியாவது, நம்மைஅழித்திட நினைக்கிறார்— அதனாற்றான், டில்லியைப்பற்றி பேசினாலும் பழிவாங்குகிறார்— இவரைப் பற்றி ஏதாவது கூறினாலும், 'திற, சிறையை!' என்று கர்ஜிக்கிறார்.

இந்த அரசியல் ஓநாய்க்கு அகப்பட்டு, எத்தனை நாட்கள், திராவிட சமுதாயம், திண்டாடப்போகிறது? சிந்தனையாளரே, எண்ணிப் பாருங்கள், இவரது போக்கை. பிறகு கூறுங்கள், உங்கள் தீர்ப்பை!

★

தூத்துக்குடித் தோழர்கள் சிறையில் கிடக்கிறார்கள்!

★

நான்கு மாதங்களாகிவிட்டன!!

நம்மோடு அவர்கள் உலவுவது எந்நாள்?

நம்மருந் தோழர்களை, விடுவிக்க வேண்டாமா?

தோழர்காள்!
உங்கள் பங்கைச் செய்தீர்களா?

முகவரி:— அ. பொன்னம்பலனார்,
'அறிவகம்'
ராயபுரம்—சென்னை.

தெலுங்கு, திராவிட மொழியே!

[டாக்டர். ஜி. வி. சீதாபதி]

இந்தியாவில் மூன்று பண்டைய மொழிகள் இருந்திருக்கின்றன. 1. கோலரியன், 2. திராவிடம், 3. ஆரியம் என்ற மொழிகள் இருந்திருக்கின்றன. கோலரியன் என்பது திராவிட ஆரிய காலத்துக்கு முற்பட்டது. இந்த மொழி மிகவும் பழமையானது. இதுமிகப்பரந்த நிலப்பிரப்பில் பரவி இருந்திருக்கிறது. கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்து கிழக்கு இந்தியத் தீவுகள் வரை பரவி இருந்தது என்னலாம்.

திராவிட மொழி ·பிராஹ்மியைத் தவிர்த்து தக்காணம்பூராவிலும் தற்சமயம் பரவி இருக்கிறது. பண்டைய காலத்தில் இது வடஇந்தியாவிலும் பரவி இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

ஆரியர்கள் வடஇந்தியாவில் பரவியதற்கு ஒப்ப ஆரிய மொழியும் வட இந்தியாவில் பரவிற்று. வடநாட்டு மொழிகளான மராத்தி, ஒரியா ஆகியவை சமஸ்கிருதத்தின் பிராகிருத மொழியிலிருந்து பிறந்தவை என்னலாம்.

*

தெலுங்கு மொழிப்பிறப்பின் அடிப்படையில் பலத்த கருத்து வேற்றுமைகள் நிலவுகின்றன. அது திராவிட மொழியைச் சேர்ந்தது என்று பலர் எண்ணுகின்றனர். சமீபகாலத்தில் தெலுங்கு, சமஸ்கிருத மொழியின் பிராகிருத பிரிவு அடிப்படையில்தோன்றியதுஎன்று கூறுவாருமுளர்.

*

ஆந்திரா என்ற வார்த்தை தெலுங்கு மொழிக்கும் தெலுங்கு பேசுவோர்க்கும் குறியாக நிற்பதை மேலே குறிப்பிட்டவர்கள் தமக்கு ஆதரவாகக் காட்டுகின்றனர்.

ஆந்திரர்கள் என்றபிரிவினர் இருந்திருப்பது உண்மையென்று ஏற்படுகிறது. ரிக் வேதத்தில் அய்திரேய பிராமண என்றகுறிப்பும் காணப்படுகிறது. மகஸ்தனிசுக்குப் பிறகுவந்த பிளினி என்பவரும் ஆந்திரர்கள் மிகவும் பலம் பொருந்தியவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார். இவர்கள் பண்டையஇந்தியாவில் ஆந்திரர்கள் என்றே அழைக்கப்பட்டு வந்ததாகவும் தெரிகிறது.

7—ம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவுக்கு வந்த சீன நாட்டு யாத்திரீகர் யாங்டிஸ்கியாங் என்பவரும் மத்திய இந்தியாவில் பேசப்படும் மொழிக்கும் ஆந்திரமொழிக்கும் வித்தியாசம் உண்டு என்று குறிப்பிட்டிருக்கிறார்.

கிறிஸ்துக்கு முன்னர் இருநூறு ஆண்டுகளும், கிறிஸ்துக்குப்பின் இருநூறு ஆண்டுகளும், ஆக இரண்டுக்கும் சேர்ந்து 400 ஆண்டுகள் வரை ஒரு ஆந்திர சாம்ராஜ்யம் நடைபெற்றிருக்கிறது.

ஆந்திரர்கள் என்ற ஒரு இனம் இருந்ததும் அவர்கள் பேசிய மொழி ஆந்திரம் என்பது உறுதியாயிற்று.

அதே ஆந்திரர்கள்தான் ஆந்திர தேசத்திலிருக்கிறார்கள் என்பதற்கும், அதே ஆந்திரமொழிதான் தற்சமயம் பேசப்படுகிறது என்பதற்கும் என்ன ஆதாரங்கள் இருக்கின்றன?

> தெலுங்கு, ஆரியமொழி என்போருமுளர். அவர்கள், அதற்குச் சான்றாக, 'ஆந்திரம்' என்பதை வாதுக்கெடுத்துச்சொல்லுகிறார்கள். ஆந்திரமும், தெலுங்கும் ஒன்றா? என்று ஆராய்ச்சி செய்கிறார், டாக்டர் ஜி. வி. சீத்தாபதி. இவர் தெலுங்கு கலைச் சொல் அகராதி தயாரிப்பாளர். சிறந்த ஆராய்ச்சியாளர். இவர், கருத்தைக் காணலாம் இக்கட்டுரையில்.

ஆந்திர மன்னன் ஹாலா என்பவரைப்பற்றி சப்த சதியில் கூறப்பட்டுள்ளவைகளைக்கொண்டு பார்த்தால் இது சமஸ்கிருதத்தில் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருப்பது விளங்கும். அதைத்தான் ஆதி ஆந்திரா மொழியென்றால் தற்சமயம் வழங்குவது அந்த ஆந்திர மொழியல்ல என்றே ஏற்படும்.

தெலுங்கைப்போன்று காணப்படும் ஹாலாவின் சப்தபதி என்ற நூலிலிருந்து சில வார்த்தைகளைப் பொறுக்கி யெடுத்து ஆராயப்பட்டது. மொழியடிப்படையைக் கொண்டிருக்கவில்லை.

ஆந்திர சாம்ராஜ்யம் தெலுங்கு நாடுவரையிலும் பரவி இருந்தாலும் இரண்டும் மிகவிஸ்தீரணமாக இருக்கவில்லை என்று தெரிகிறது. மகாராஷ்டிரம் ஆந்திராவில் ஒரு பகுதியாக இருந்தது. தெலுங்கு நாட்டின் ஒரு பகுதியாக இருந்த கலிங்கம் ஆந்திர சாம்ராஜ்யத்துக்குட்பட்டிருக்கவில்லை.

தெலுங்கு நாட்டின்மீது ஆந்திர சாம்ராஜ்யம் உரிமை கொண்டாடிற்று. தெலுங்குநாட்டை யாண்ட மன்னர்கள் பலர். அவாகள் ஒரே வமிசத்தினராகவும் இல்லை. ஒரே மொழியையும் பேசவில்லை.

தெலுங்கு நாட்டை மகம்மதியர்களும் ஆங்கிலேயர்களும் ஆண்டிருக்கின்றனர். ஆண்டவர்களின் பாஷை உச்சம் பெற்றிருந்தது.

*

ஆந்திரம் என்றால் தெலுங்கு என்று பலகாலமாகக் கூறப்படுகிறது. இதற்குப் போதிய ஆதாரம் கிடைக்கவில்லை.

ஆந்திரநாட்டு முதல் முக்கிய கவி நாயனா என்பவர், தான்எழுதிய பாக்களை தெலுங்கு என்னும் மொழியில்தானே எழுதினாரே தவிர்த்து ஆந்திர மொழியில் எழுதியதாகத் தெரியயில்லை.

அதற்கு அடுத்த தெலுங்கு கவி நம்மிச் சோடா என்பவர் தெலுங்கு ஆந்திர விஷாயா என்னும் பகுதியில் பரவிய மொழியாகக் குறிப்பிட்டார். பிற்காலத்தில் ஆந்திரம் என்பது மொழிக்கும் அதனைப் பேசும் மக்களுக்கும் ஏற்றி கூறப்பட்டது.

இதற்கிடையில் தெலுங்கு ஆரியர் வயமாயிற்று. தெலுங்கு மொழிப் புலவர்களெல்லாம் சமஸ்கிருதத்துக்கு அடிமையாகி திராவிடர்களின் இடங்களுக்கும் பெயர்களுக்கும் சமஸ்கிருத அடிப்படையில் பெயர்சூட்டத் தலைப்பட்டனர்.

ஆந்திரா என்பது கவர்ச்சியான வார்த்தையாகி சுலபத்தில் சமஸ்கிருத உச்சரிப்பில் ஆந்திர பாஷா, ஆந்திரப் பிரபந்தா, ஆந்திர கிரந்த என்று ஆபாச உச்சரிப்பைப் பெற்றது.

ஆனால் தெலுங்கு என்பதும் வெறுக்கப்படவில்லை. மக்கள் தங்களை தெலுங்கர்கள் என்றும் தாங்கள் பேசும் மொழி தெலுங்கு மொழி என்று இன்றும் கூறிவருகின்றனர்.

சமீபகாலம் வரை ஆந்திரர், ஆந்திரம் என்பதற்கு பதில் தெலுங்கு, தெலுங்கர் என்ற வார்த்தைகளே உபயோகத்திலிருந்து வந்தன.

சமீபகாலத்தில் தான் தெலுங்கர்கள் ஆந்திரர், ஆந்திரம், ஆந்திர நாடு என்ற வார்த்தைகளில் மோகங் கொண்டு அவற்றை உபயோகிக்கத் தொடங்கினர்.

ஆந்திரர்கள் என்ற வார்த்தையை உபயோகிக்கத் தொடங்கியது சில தெலுங்கர்களுக்குப் பெருத்த சந்தேகத்தை உண்டுபண்ணத் தொடங்கி விட்டது. தங்கள் மொழி திராவிட தெலுங்கு வார்த்தைகளைக்கூட சமஸ்கிருதம் கலந்த வார்த்தைகளாகச் செய்வது அநேகர்களுக்கு வழக்கமாகி விட்டது. வெறும் சாதாரண வார்த்தைகள் மொழியுணர்ச்சியை யூட்டுவன வல்ல. இலக்கண இலக்கிய பகுபதங்கள் மொழியுணர்ச்சியையுண்டு பண்ணுகின்றன. வார்த்தைகள் பேசும் மக்களின் நாட்டின் அவர்களின் நாகரிகத்தைக், கலாசாரத்தைக் கிளற வல்லவையாக இருக்க வேண்டும்.

*

இந்த ஆதாரத்தைக் கொண்டு தெலுங்கு மொழியை ஆராய்ந்தால் தெலுங்கு மொழி திராவிட மொழி என்று ஏற்படும். இத்திராவிட மொழி தெலுங்கர்களின் கலாசாரத்திற்கேற்ப வளர்ச்சி பெற்றுள்ளது. இதையே வேறுவிதமாகச் சொல்ல வேண்டுமானால் தெலுங்கின் அடிப்படை திராவிடம்; அதன் மேல் பரப்பு கலப்பட மொழி.

கால்ட்வெல் என்ற பெரியார் திராவிடர்களின் தனித் தமிழ் மொழியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். கொரடா ராமகிருஷ்ணய்யா என்பவர் திராவிடர் தொடர்புள்ள வார்த்தைகளைப் பற்றி எழுதியுள்ளார்.

தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் என்ற நான்கு பிரதான திராவிட மொழிப் பேராசிரியர்கள் திராவிடத் தொடர்புள்ள வார்த்தைகளைக் குறித்த பட்டியலைத் தயாரித்து வருகின்றனர்.

இவைகளைக் கொண்டு பார்த்தால் தெலுங்கு மொழி திராவிட மொழி என நன்கு புலனாகும்.

புதிய வெளியீடுகள்

—⊛—

—பொதுச் செயலாளர் அண்ணா தீட்டிய—

★ மாஜி கடவுள்கள்

சாதா பயிண்டு 3—0—0

அட்டை பயிண்டு 3—8—0

கடவுள்கள், கடவுள் கொள்கைகள் பற்றிய சிறந்த ஆராய்ச்சி நூல். பல நாட்டுக் கடவுளரின் அழகிய படங்கள். 260-பக்கங்கள். அழகிய மூவர்ண அட்டை.

★ பார்வதி பி. ஏ. 3—0—0

கல்வியறிவும் இளமையும் சாகசமும் நிறைந்த ஒரு துடிப்புள்ள பெண்ணின் கதை. அழகிய மூவர்ண அட்டை.

க. அன்பழகன் எம். ஏ.

வளரும் கிளர்ச்சி 0—8—0

டாக்டர் நாயர் காலத்திலிருந்து இன்று வரை திராவிடர் இயக்கத்தின் சிறந்த வரலாறு.

தொண்டா? துவேஷமா? 0—8—0

நமது இயக்கத்தின் அடிப்படைக் கருத்தினை எடுத்துக் கூறும் சிறந்த ஆராய்ச்சி நூல்.

இராதாமணாளன்

கானல் நீர் 1—0—0

சரித்திரச் சம்பவங்கள் நிறைந்த சுவை மிகுந்த கதை. மூவர்ண அட்டை.

கலைஞர் கருணாநிதி

அல்லி தர்பார் 1—0—0

திருவாரூர் இளவலின் வீர முழக்கம். மூவர்ண அட்டை.

அச்சில்:

கலைஞர் கருணாநிதி எழுதிய அகிம்சா மூர்த்திகள்.

புத்தர் பிரான் அருளிய தம்மபதம்.

★ பாரி நிலையம் ★

59, பிராட்வே, சென்னை 1.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 25, Tirukkachinambi St., Kancheepuram.